புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாது௵ வைகாசிமீ கருஉ ( 1936 மே 28 ) வியாழக்கிழமை { இலக்கம்—கசு.

## முசோலினிக்குப் பெரிய சத்துரு யார்?

### அபிஸீனிய சக்கரவர்த்தி சத்துருவில்லை; பாஸிஸ்ட் இயக்க விரோதிகளும் சத்துருவில்லை; ஈடனும் வைரியில்லை

### படாக்ளியோவே பலத்த சத்துரு

ஒரு விசேஷ நிருபர் லண்டன் "ஸண்டே ரெபரி" என்னும் பத்திரிகையிற் பின்வருமாறு எழுதுகின்றார்.

முஸோலினிக்கு அபிஸீனிய சக்கரவர்த்தி சத்துருவில்லை. பாஸிஸ்ட் இயக்கத்திற்கு எதிரிடையானவர்களும் விரோதிகளில்லை. மிஸ்டர் ஈடனும் வைரியில்லை. சுயமாகவும் அவர் கேடுதேடிக்கொள்ள மாட்டார். அவ்விதமாயின் முசோலினிக்குச் சத்துரு இல்லையா? இருக்கிறார். அவர்தான் இப்பொழுது அபிஸீனியாவைத் தோற்கடித்திருக்கும் மார்ஷல் படாக்ளியோ.

பாஸிஸம் ஓங்கிய காலம் முதல் அவர் அதை எதிர்த்து வந்திருக்கிறார். பாஸிஸ்டு முறையில் அவர் வணங்குவதில்லை. முஸோலினிக்காகவும் அவர் போராடவில்லை. அரசருக்காகவே அவர் போராடுகிறார். அவர் அதிக முக்கியஸ்தராக இருப்பதால் முஸோலினி அவரை அசைக்க முடியவில்லை.

1922-ம வருஷத்தில் 400 மைல் களுக்கப்பாலுள்ள மிலானிலிருந்து டிபோனோ தலைமையில் பாஸிஸ்டு கூட்டத்தார் ரோமாபுரியை நோக்கி வந்தனர்.

படாக்ளியோ அவர்களைப் பார்த்துப் புரளியாகச் சிரித்தார். ஒரு படையைக் கொடுங்கள் இவர்களைச் சமுத்திரத்திற் சேர்த்துவிடுகிறேன் என்றார். அவ்விதம் செய்திருந்தால் முதல் வேட்டையிலேயே பாஸிஸ்டு இயக்கம் நசித்திருக்கும்.

அவர் முன்னணியில் இருக்கும் வீரர். 1918-ம வருஷத்தில் மகாயுத்தம் நடந்துவந்தபோது ஜெர்மனிக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய ஒரு சுருக்கமான பாஷையில் 5 முனைகளில் ஜெர்மனியப் படைகளைத் தாக்கவேண்டுமென்று மார்ஷல் போஷுக்குச் செய்தி அனுப்பினார். மூன்றுமணி நேரத்தில் யுத்தத்தை நிறுத்தவேண்டுமென்று வேண்டுகோள் கிடைத்துவிட்டது.

#### அரசரின் நண்பர்

அபிஸீனியாவின்மீது யுத்தத்தை ஆரம்பித்தபோது டிபோனோ படைத்தலைமை வகித்தார். அவர் முஸோலினியின் விருப்பப்படி அதிக வேகமாக முன்னேறிச் செல்லவில்லை. அவரைத் திரும்ப அழைத்துவிட்டார்கள். அதிகாரிகள் சூழ்ச்சிசெய்து தாமதப்படுத்தியதன் மூலம் அவருக்கு வரவேற்பும் கிடைக்காமல் போய்விட்டது.

யாரைப் பிடிக்கலாமென்று பார்த்தார் முஸோலினி. அவர் அகக்கண்முன் படாக்ளியோ நின்றார். அரசரிடத்திலுள்ள விசுவாசத்தினாலேயே பாஸிஸ்டு ஆட்சியின் ஆரம்பகாலத்தில் அவர் அதைச் சகித்துக் கொண்டிருந்தாரென்பதையும் அவர் மறந்தார். யுத்த மந்திரி காரியாலயத்திற்கு அழைப்புவந்தது. ரோமாபுரியிலிருக்கையில் படாக்ளியோ அங்கேயே தங்கியிருப்பது வழக்கம். வெளியில் சென்றால் விபத்து ஏற்பட்டுவிடுமென்று அவருக்குப் பயம்.

இத்தலிக்கு அவரால்தான் வெற்றி கிடைக்கும். அவர் வெளியிலிருந்தால் பாஸிஸ்டு இயக்கத்திற்கு எதிரிடையாகக் கிளர்ச்சி ஏற்பட்டாலும் தலைமை வகிப்பதற்கு ஆளில்லாமற் போகும். முஸோலினிக்கு இது தெரியும். எனவே படாக்ளியோவை ஆபிரிக்காவுக்கு அனுப்பி விட்டார்.

அவர் தலைமை ஏற்றதும் சரியான யுத்தம் நடைபெறலாயிற்று.

தொடர்ச்சி 8ம் பக்கம்.

---

கன்னு ணின்ற வொளியைக் கருத்தினை
விண்ணு ணின்று விளங்கிய மெய்யினை
எண்ணி யெண்ணி யிரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்றொழுந் தெய்வமே.
—தாயுமானசுவாமிகள்

---

#### புலிபோன்ற குழந்தை.

ஹளசிபாகை மே 25

ஹளசிபாகை ஆஸ்பத்திரியில் ஒரு பெண்ணுக்கு அதிசயமான குழந்தை பிறந்திருக்கிறது. இக்குழந்தையின் கைகளிலும் கால்களிலும் புலியின் நகங்கள் போன்ற கடினமான நகங்கள் ஒன்றரை அங்குல நீளத்திற்கு வளர்ந்திருக்கின்றன. குழந்தைக்கு காதுகள் இல்லை. ஆனால் சிறு துவாரங்கள் இருக்கின்றன வாயில் பற்கள் எல்லாம் முளைத்திருக்கின்றன, குழந்தை உயிருடனேயே இருக்கிறது. இது இம்மாதம் 19-ம் தேதி பிறந்தது. உடலில் புலி போன்ற வரிகள் காணப்படுகின்றன. உறக்குறைய இக்குழந்தை புலிக்குட்டிபோல் தானிருக்கிறது. மால்டட் மில்க் பிராந்தி முதலியவைகளை அது அருந்துகிறது.

#### விவாக ரத்து

பாரிஸ் நீதிஸ்தலத்தில் கலியாணமாகி இரண்டாண்டுகள் கழிந்த பின்னர் ஓர் அழகியமாது விவாகரத்து வழக்குப் போட்டிருக்கிறாள். அவள் கணவர் மற்ற எல்லாவகையிலும் நல்லவர் தானும். ஆனால் அவர் அவளை ஒருநாளும் முத்தமிடவில்லையாம். அவரும் அவளை ஒருநாளும் முத்தமிட [illegible] ன்று கண்ணீர் பொழியச் [illegible] ன். வழக்கின் பிந்திய [illegible] ல் வரவில்லை.

---

## புதிய ராஜப் பிரதிநிதியின் போக்கு.

### "கசக்கிப் பிழிந்துவிடுவாராம்;" அதிகாரிகளுக்கும் அரசாங்க காரியாலயத்தினர்க்கும் கஷ்டம்

### கர்ஸன் வாசனை; ரீடிங்சரக்து; இர்வின் தன்மை

"ரோயல் விக்லி" என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் "வேபார்" என்பார் எழுதுவது வருமாறு:-

டில்லி எங்கும் புதிய ராஜப் பிரதிநிதி எவ்விதம் நடந்து கொள்ளுவாரென்பதைப்பற்றியே பேச்சாக இருக்கிறது. அவர் செய்யும் சாமான்யக் காரியத்திற்கும் அர்த்தங் கற்பிக்கப் பலர் கிளம்பி விடுகிறார்கள். இந்தியாவில் சாமான்யர்களுக்குக்கூட மனிதர்களை நிறுத்து விடுவதற்குச் சக்தியுண்டு. அவர்களுடைய அபிப்பிராயம் காலக்கிரமத்தில் எங்கும் பரவி அதுவே பொதுஜன அபிப்பிராயமுமாகி விடுகிறது. சந்தைக் கடையில் ஒரு சாமான்யன் புதிய ராஜப் பிரதிநிதியைப் பற்றித் தெரிவிக்கும் அபிப்பிராயமும் ராஜப் பிரதிநிதிக்கு நற்பெயரோ அல்லது கெட்ட பெயரோ ஏற்படும்படி செய்துவிடுகிறது. அவ்விதக் கதைகள் இப்பொழுதே பரவ ஆரம்பித்துவிட்டன.

* * *

இர்வின் தம்பதிகள் வசித்த பாகத்தில் இப்பொழுது லின்லித்கோ தம்பதிகள் தங்கியிருக்கிறார்கள். வில்லிங்டன் தம்பதிகள் வசித்து வந்த பாகத்தை விருந்தினர்களுக்காக அவர்கள் ஒதுக்கிவைத்து விட்டார்கள். இராணுவ நியதிகளுக்கு விரோதமாக இந்தியப் படையைச் சேர்ந்த இருவர் இரவில் பாராக் கொடுத்துக் கொண்டிருக்கையில் சம்பாஷித்திருந்ததற்காக அந்தப் படைக்குப் பதிலாகக் கூர்க்கப் படை காவல் வேலைக்கு நியமிக்கப் பட்டு விட்டது. இராத்திரி வேளைகளில் சிகரெற்றுக் குடித்த பாராக்காரர்களான போலீசாருக்கும் கஷ்டம் ஏற்பட்டு விட்டது.

முன்னர் சிகரெற்றுக்களையும் பானங்களையும் பங்கிட்டுக் கொடுத்து விட்டுக் கணக்கெழுதிவிடுவது வழக்கம். வர்த்தமமான் இப்பொழுது மலையேறிவிட்டான்! ராஜப்பிரதிநிதி மாளிகையில் இவ்விதமெல்லாம் நடைபெறலாமா? இரவு இரண்டு மணிக்குத்தான் லின்லித்கோ பிரபு உறங்கச் செல்லுகிறார். காலை 5 மணிக்கு எழுந்து விடுகிறார். என்னுடைய வாழ்நாளில் இவ்வளவு சுறுசுறுப்பான ராஜப் பிரதிநிதியை நான் கண்டதே இல்லை.

புதியராஜப்பிரதிநிதி கசக்கிப் பிழிந்து விடுவாரென்று பெரிய உத்தியோகஸ்தர்களும் சொல்லுகிறார்கள். அதிகாரிகளுக்கும் அரசாங்க காரியாலயத்தினருக்கும் காம்பு கழன்றுவிடும். ஆட்டம் போடுவது இவரிடம் பலியாது. காரியத்தில் கருத்தாயில்லாதவர்கள் இவரிடம் பேர் சொல்ல முடியாது.

குடும்பத்தைப்பற்றி இவர் ரேடியோ பிரசங்கத்தில் பிரஸ்தாபித்தது எதிராளிகளுடைய மனதைக் கவர்வதற்கு ஸ்காட்லந்து தேசத்தினர் அனுஷ்டிக்கும் முறையாக இருக்கலாம். அது ஆங்கிலேயர்களுடைய வாடிக்கையன்று. அது யாதாயினும் "புதிய ராஜப்பிரதிநிதி கசக்கிப் பிழிந்துவிடுவார். அவரது சகாக்களும் அவருடன் ஓடியாகவேண்டும்" என்று ஒரு ஐரோப்பிய அதிகாரி சொன்னார். [illegible] ராஜப் பிரதிநிதியின் குதிரை [illegible] யைப் பார்த்த போதும் அ[illegible] உணர்ச்சிதான் எனக்கு ஏற்பட்டது. இவர் சில்லறை விஷயங்களுட்பட எல்லாவற்றையும் நேரில் கவனிக்கிறார்:

"பழையகாலத்துச் சிற்றரசரைப் போல இவர் இந்திய நிலைமையை நோக்கலாம். இருந்தாலும் வரப்போகும் தேர்தலில் அரசாங்கத்தார் நடு நிலைமையை வகித்திருப்பார்களென்றும் எல்லாக் கட்சிகளையும

தொடர்ச்சி 7ம பக்கம்.

---

## "கொடிபறக்குது பாரடா"

### பல்லவி

கொடிபறக்குது கொடிபறக்குது கொடிபறக்குது பாரடா
கோணலற்ற கோலில் எங்கள் கொடிபறக்குது பாரடா

### சரணங்கள்

1

சிறைகிடந்து துயரடைந்த தேசபக்தர் நட்டது
தீரவீர சூரரான தெய்வபக்தர் தொட்டது
முறைகடந்து துன்பம்வந்து மூண்டுவிட்டபோதிலும்
முன்னிருந்து பின்னிடாமல் காக்கவேண்டும் நாமிதை (கொடி)

2

வீடிழந்து நாடலைந்து வினையிழந்த நாளிலும்
விட்டிடாத தேசபக்தர் கட்டிநின்று காத்தது
மாடிழந்து கன்றிழந்து மனையிழக்க நேரினும்
மானமாக நாமுமந்தக் கொடியைக்காக்க வேண்டுமே (கொடி)

3

உடலுழைத்துப் பொருள்கொடுத்து உயிருந்தந்த உத்தமர்
உண்மையான தேசபக்தர் ஊன்றிவைத்த கொடி இது
கடல்கொதித்த தென்னமிக்க கஷ்டம்வந்த போதிலும்
கட்டிநின்று விட்டிடாமல் காக்கவேணும் நாமிதை (கொடி)

4

மனமுவந்து உயிர்கொடுத்த மானமுள்ள வீரர்கள்
மட்டிலாத துன்பமுற்று நட்டுவைத்த கொடியிது
தனமிழந்து கனமிழந்து தாழ்ந்துபோக நேரினும்
தாயின்மானம் ஆனஇந்தக் கொடியையென்றும் தாங்குவோம் (கொடி)

—நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம்பிள்ளை

## பாலர் பகுதி

# பறவைகள் ராஜா

முன் ஒரு காலத்தில் பக்ஷிகளுக்குள் ஒரு பெரிய சண்டை ஏற்பட்டது. அவைகளுக்குள் யார் ராஜா என்பதைப் பற்றியே அந்தச்சண்டை ஆகும். கழுகு, "நான்தான் பக்ஷிகளுக்குள் ரொம்பவும் பலசாலி. என் இறக்கைகளினுல் ஓர் அடி கொடுத்தால் தாங்குவதற்கு உங்களில் ஒருவர் கிடையாது" என்றது. கருடன் சொல்லிற்று, "நான்தான் பகவானுடைய வாகனமாயிருக்கிறேன். என்னைப் பார்ப்பதே ஒரு சுபசகுனமென்று ஜனங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் என்னை விட யோக்யதை உள்ள பக்ஷி வேறு ஒன்றும் கிடையாது."

குயில், "பலம் மட்டும் இருந்தென்ன உபயோகம்? என் குரலைப் பாருங்கள். நான் பாட ஆரம்பித்தால் எல்லோரும் பரவசமடைகிறார்கள். நான்தான் ராஜாவாக இருக்க வேண்டும்" என்று சொல்லிற்று.

பிறகு, காக்காய், குருவி கொக்கு, மயில் என்று எல்லாப் பக்ஷிகளும் தங்கள் பெருமைகளைத் தாங்களே சொல்லிக்கொண்டு, தங்களைக் காட்டிலும் ராஜாவாக யோக்யதை உள்ள பக்ஷி வேறு இல்லையென்று சொல்லின. இவ்வாறு எல்லாம் தலைக்குத்தலை கத்திக்கொண்டு, பிரமாதமாக இரண்டு நாள் இரைச்சல் போட்டன. இதனுலெல்லாம் உபயோகமில்லை.

கடைசியில் ராஜாளி சொல்லிற்று; "நாம் வீணய்ச்சண்டை போடுவதில் பயனில்லை, ஒரு பந்தயப் வைத்து, அதில் எது ஜயிக்கிறதோ அந்தப் பக்ஷியை ராஜாவென்று தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் அந்தப் பந்தயம் என்னவென்றால், எல்லாப் பட்சிகளும் பறக்க வேண்டும். எந்தப் பக்ஷி மற்றெல்லாப்பட்சிகளையும் விட உயரப் பறக்கிறதோ, அதுதான் ராஜா."

இதை மற்றெல்லாப் பட்சிகளும் ஒப்புக்கொண்டன.

பந்தயமும் ஆரம்பமாயிற்று. வானம் முழுதும் பக்ஷிகள் ஒரே கூட்டமாய்க் கூடிவிட்டன. ஒரே சமயத்தில் எல்லாம் பறக்க ஆரம்பித்தன. வாத்துக் கூடதகத்திக் குதித்துப பார்த்தது. கோழியும் ஒரு மரக்கிளை வரை பறந்து பார்த்தது. கடைசியில் எல்லாவற்றிற்கும் மேல் ஒரு கழுகுமட்டும் பறந்தது. அ[illegible]ழே பறக்குப படசிகளைப் [illegible]து, "பாருங்கள்! என்னை விட உயரத்தில் யாராவது பறந்து காண்பியுங்கள், பார்ப்போம்!" என்று கர்வமாய்க் கூவிற்று.

அப்போது சட்டென்று அதன் இறகில் இதுவரையில் ஒளிந்துகொண்டிருந்த சிட்டுக்குருவி கிளம்பிற்று. கழுகுக்கும் மேல் ஒரு சாண் உயரம் பறந்து காண்பித்துவிட்டு கீழே இறங்கி, "நான் ஜயித்துவிட்டேன். எனக்கு ராஜாவாக முடி சூட்டுங்கள்" என்றது.

போயும் போயும் சிட்டுக்குருவிக்கு முடிசூட்ட மற்றவைகளுக்கு இஷ்டமில்லை. ஆகையால் ஏதாவதொரு உபாயம் செய்து அதைத் தோற்கடிக்க வேண்டுமென்று பக்ஷிகள் நினைத்துப் பார்த்தன.

அப்போது ராஜாளி, "இந்தப் பந்தயம் கெலித்தால் மட்டும் ராஜாவாகி விடமுடியாது. இன்னொரு பந்தயமும் கெலிக்க வேண்டும். எந்தப்பக்ஷி மற்ற எல்லாவற்றையும் விட அதிக ஆழம் பூமிக்கு அடியில் போக முடியுமோ, அதற்குத்தான் முடி சூட்டுவோம்" என்றது.

இதர பக்ஷிகளும் ஒப்புக்கொண்டன. அவைகளுக்கெல்லாம் சிட்டுக்குருவியின் மேல் இருந்த ஆத்திரத்தில் அதை எப்படியாவது தோற்கடித்தால் போதுமென்ற எண்ணம்தான் மேலோங்கியிருந்தது.

உடனே எல்லாப் பக்ஷிகளும் தரையில் இருந்த பள்ளங்களிலெல்லாம் போய் உட்கார்ந்துகொண்டன. சிட்டுக்குருவியும் அஞ்சாமல், 'இதோ பாருங்கள்!' என்று சொல்லிவிட்டு, ஓர் எலிவளைக்குள் நுழைந்தது.

இதைக் கண்ட பக்ஷிகளுக்கெல்லாம் கோபம் பொங்கிற்று சிட்டுக்குருவியை எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தன. அவை ஆந்தையைக் கூப்பிட்டு, அதை வளையின் வாயிலில் காவலாக உட்கார வைத்து, "சிட்டுக் குருவி வெளியில் வந்தால் அதைக் கொன்று விடு! தூங்கி விடாதே! வெளியில் அதைத்தப்ப விட்டாயோ, உன்பாடு ஆபத்து!" என்று எச்சரித்துவிட்டுப் போயின.

ஆந்தை உட்கார்ந்து காவல் காத்துக்கொண்டிருந்தது. இரவு வெகுநேரமாகியும் குருவி தலைகூட நீட்டவில்லை. ஆந்தை, "சரிதான்! இது எங்கேவரப்போகிறது!" என்று வலது கண்ணை மட்டும் மூடிக்கொண்டு சற்று நேரம் தூங்கிற்று. பிறகு இடது கண்ணை மட்டும் மூடிக்கொண்டு தூங்கிற்று. விடியற்கால வேளையில் மிகவும் அசதியாய் இரண்டு கண்ணையும் மூடிக்கொண்டு தூங்கிப் போய்விட்டது. சமயம் பார்த்துச் சிட்டுக்குருவி வெளியே வந்து, "நமக்கு ராஜா பதவி வேண்டாம்; உயிர் பிழைத்தாற் போதும்" என்று ஓடி ஒளிந்தது.

விடிந்ததும் பக்ஷிகள்வந்து பார்த்தபோது ஆந்தை நன்ருய்த் தூங்கிக்கொண்டிருந்தது. பொந்திற்குள் சிட்டுக் குருவியைக் காணேம். பக்ஷிகள் கோபமாய் ஆந்தையைத் திட்டி, அதைக் கொத்திக் கொத்தி விரட்டி விட்டன.

அது முதல்தான் ஆந்தையை மற்றப் பக்ஷிகள் தங்களுடன் சேர்த்துக் கொள்வதில்லை; எங்கேயாவது கண்டாலும் கொத்திக் கொத்தித் துர[illegible]ன்றன.

## விநோதக் கொத்து

### நவகிளைப் பனை

மதுரையை அடுத்த திருப்பத்தூருக்குக் கிழக்கே மூன்றுமைல் தூரத்தில் ஒரு பனைமரம் ஒன்பது கிளைகளுடன் விளங்குகிறது. மரம் 35 அடி உயரம் இருக்கிறதாம்.

### பறக்கும் பெண்கள்

இங்கிலாந்தில் பெண் விமானிகள் தொகை நாளேற ஏற அதிகரித்து வருகிறது. இப்போது சுமார் 4000 விமானமோட்டும் பெண்களிருந்து வருகிறார்கள். "ஏ" பைலட் சர்ட்டிபிக்கட் வாங்கச் செலவாகும் பணம் 50 பவுன்தான்.

### கிரீஸ் கடல் தளவாடம்

கிரீசும் கப்பற் படையை அதிகப்படுத்த நிச்சயித்துவிட்டது. நான்கு நாசகாரிக் கப்பல்களைக் கட்ட ஏற்பாடு செய்துவிட்டது. பிரிட்டிஷார் அவற்றைக் கட்டி வருகிறார்கள். ஜெர்மனியர் தாம் கட்டிக்கொடுப்பதாக ஒப்பந்தம் பேசினார்கள்; ஆனால் அது நிறைவேறவில்லை.

### கிழவிக்குப் பல் முளைக்கிறது

டர்ஹாமில் ஹானா என்ற மாது 25-வயதில் தனது பற்களையெல்லாம் பிடுங்கிவிட்டாள். இப்பொழுது எண்பத்துமூன்ருவதுவயதில் இருதாடைகளிலும் பற்கள் முளைக்கத் தொடங்கியிருக்கின்றனவாம்.

### நீடித்த விவாகப் பேச்சு.

ஆஸ்ட்ரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் சமீபத்தில் ஒருவர் டெலிபோன்மூலம், 1மணி 43நிமிஷம் பேசியதற்கு 169பொன் செலவாயிற்று. இந்தப் பேச்சு வியாபாரப் பேச்சல்ல விவாகசம்பந்தமானபேச்சாம்.

### பாலத்தைத் திருடிய பக்காத் திருடர்கள்.

போலந்து நாட்டில் கட்கோ நகரை அடுத்த நதிமீது போட்டிருந்த பெரிய இரும்புப்பாலத்தைத் திருடர்கள் பட்டப் பகலிலேயே அடித்துக்கொண்டு போய்விட்டார்கள். திருடர்கள் வேலையாட்கள் போல வேடம்பூண்டு பாலத்தைப் பிரித்துக்கொண்டிருந்தார்கள். பொதுஜனங்களும் பொலீசாரும்; அதிகாரிகள் உத்தரவின்மீது அவர்கள் வேலைசெய்வதாகக் கருதியிருந்தார்கள். திருடர்கள் இரும்புப்பாலத்தைக் கொண்டுபோய் இரும்பு விலைக்கு விற்றுவிட்டார்களாம்.

[illegible]சி 6ம் பக்கம்.

# அமெரிக்ககறுப்புமக்களின் அநுதாபமும் பாராட்டும்

"மகாத்மா காந்திக்கும் இந்திய தேசிய இயக்கத்தின் தலைவராக விளங்கும் கனவானுக்கும் வாழ்த்துக் கூறுகின்றோம்"

## இந்திய காங்கிரஸ் தலைவர்க்குக் கடிதம்.

நியூயார்க்கிலுள்ள எதியோப்பிய சமாதான சங்கத் தலைவரான ஸ்ரீ ராபர்ட் ஒஜார்டன், இந்திய தேசிய காங்கிரஸ் தலைவரான பண்டித ஜவஹர்லால் நேருவுக்குக் கீழ்க்கண்ட கடிதத்தை எழுதியுள்ளார். அ. இ. காங்கிரஸ் கமிட்டியின் வெளிநாட்டு இலாகா அதைப் பிரசுரித்துள்ளது:-

நீங்கள் காங்கிரஸில் செய்த பிரசங்கத்தை, "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை மூலம் படித்தோம். விடுதலைக்காக இந்திய ஜனங்கள் உற்சாகத்துடனும் தைரியத்துடனும் போராடி வருவதைக் கண்டு அமெரிக்கா, மேற்கு இந்தியதீவுகள் இங்குள்ள வெள்ளையரல்லாதாரகிய நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம்.

மகாத்மாகாந்தி ஆரம்பித்த போராட்டமானது வெற்றிபெறும் முறையில் தாங்களும் தங்களது சகாக்களும் வேலையை மேற்கொண்டு நடத்திச் செல்லுவீர்களென்றே நாங்கள் நம்புகிறோம். இந்தியாவிலுள்ள எங்களது சகாக்கள் போலவே, மேற்பாதி உலகத்திலுள்ள வெள்ளையல்லாத நாங்களும் அவதிப்பட்டு வருகிறோம். உலகத்திலுள்ள கறுப்பு நிறத்தவர்கள் கூடிய சீக்கிரம், வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுவிடுவார்களென்பதே எங்களது நம்பிக்கை.

### இராணுவத்தார் மறுப்பு

19 2ம் வருஷத்தில் மகாத்மா காந்தி ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்த காலத்தில், அதை எதிர்த்துப் போராடுவதற்காக, பிரிட்டிஷ் மேற்கு இந்தியப்படை ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப் பிரிட்டிஷ் சர்க்கார் முயன்றது எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. இந்திய சகோதரர்களும் நாங்களும் ஒரேவிதமான அநீதிக்கு உட்படுத்தப்பட்டிருப்பதை மேற்படி இராணுவப் படையினர் அறிந்திருந்ததால், அவர்கள் இந்தியாவுக்குச் சென்று அங்கு தர்மமாகப் போராடிவரும் தங்கள் சகோதரர்களைக் கொல்ல மறுத்துவிட்டார்கள்.

மகாயுத்தத்திற்குப் பின்பு, மேற்கிந்திய மக்களின் மனோபாவம் வேறுவிதமாக மாறிவிட்டதைப் பிரிட்டன் அறிந்தது. கறுப்பர்களை இனியும் ஏமாற்றிவர முடியாதென்றுணர்ந்து மேற்கிந்திய படையைக் கலைத்துவிட்டனர் இப்போது ஐரோப்பாவிலே யுத்தமேகங்கள் சூழ்ந்து வருகின்றன. எந்த நிமிஷத்திலும் யுத்தமேற்பட்டு விடலாமென்பதை உணர்ந்து மேற்கிந்திய படையை மீண்டும் திரட்ட பிரிட்டன் முன்வந்திருக்கிறது.

### ஏகாதிபத்திய எதிர்ப்பு.

உலகத்தின் மற்றப் பாகங்களிலுள்ள வெள்ளையரல்லாதவர்களின் சுதந்திரத்திற்கு அமெரிக்க கறுப்பர்கள் ஒருநாளும் முட்டுக்கட்டையாக இருக்க மாட்டார்களென்று நான் உறுதி கூறுகிறேன் வெள்ளையரின் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதில, மற்றவர்களுடன இந்தியாவிலுள்ள 36 கோடி ஜனங்களும் ஒத்துழைப்பார்களென்றே நாங்கள் நம்புகிறோம்.

ஆபிரிக்காவிலே சுதந்தரமாக உள்ள கறுப்பர் நாடு எதியோப்பியா ஒன்றுமே ஆகும். அதையும் வெள்ளையர்கள் விழுங்கிவிட்டார்கள். எதியோப்பியாவின சார்பாக இந்திய மக்கள் பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும், சர்வதேச சங்கத்திலும் பலமாகக் கண்டித்து ஆட்சேபிக்க வேண்டும்.

ஏகாதிபத்திய—முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட ஆபிரிக்காவும், ஆசியாவும் கட்டுப்பாடாக வேலை செய்ய வேண்டுமென்பதை நாங்கள் பெரிதும் உணர்ந்து வருகிறோம். உலகத்திலுள்ள 125 கோடி வெள்ளையரல்லாதவர்களையும் ஒன்று சேர்த்து ஐக்கியப் படுத்துவதின் மூலமே நாம் அவ்விதம் செய்ய முடியும்.

மகாத்மா காந்திக்கும், இப்போது இந்திய தேசிய இயக்கத்தின் தலைவராக விளங்கும் கனவானுக்கும் எங்கள் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## முஸோலினிக்குப் பெரிய சத்துரு யார்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிபோனேவின் ஏற்பாடுகளையெல்லாம் மாற்றினர். கருஞ்சட்டையினரை முன்னணிக்கு அனுப்பினர்.

அதற்குப்பின் குட்டி முஸோலினிகளும் முசோலினியின் மாப்பிள்ளைகளும் நடத்திய திருவிளையாடல்களைப்பற்றிப் பேச்சே இல்லை. அவர்களுக்கு மிகுந்த துக்கந்தான். என்ன செய்வது?

இத்தலிய விமானப் படையின் கர்த்தரான பால்போவும் அவருடன் சேர்ந்துகொண்டார். அவரும் அரசரைக் கொண்டாடுகிறவர். முசோலினியை வெறுக்கிறவர். அவர்செல்வாக்குத்தேசத்தில் அதிகரித்துவிடவே முஸோலினி அவரை லிபியா கவர்னராக அனுப்பிவிட்டார்.

### விமானங்கள் தயார்

சமையம் வந்ததும் முஸோலினிக்கு எதிரிடையான இயக்கம் வலுத்ததும் ரோமாபுரிக்குப்பறந்து செல்ல இருவரும் விமானங்களைத் தயாராக வைத்திருக்கிறார்கள்.

பால்போவுக்கு விமானம் ஓட்டத் தெரியும். படாக்லியோவுடன் அவருடைய இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு விமானம் ஓட்டத் தெரியும். அபிஸீனியாவில் அவர்கள் இருப்பதால் இவர்களை சடாகவும் முஸோலினி பிடித்து வைத்துக் கொள்ள முடியாது.

இப்பொழுது படாக்லியோவிடத்தில் முஸோலினி பூரண நம்பிக்கை வைத்திருக்கிறார். எதிர்காலத்தில் அபிஸீனிய பீடபூமிகள் தரைமட்டத்திற்கு 8000 அடி உயரத்திலிருக்கின்றன; உயரம் பலஹீன இருதயக்காரர்களுக்கு அடுத்ததில்லை. படாக்லியோவின் இருதயம் பலஹீனமானது.


### அறிவித்தல்

யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பிரவேசம்

யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரிய கலாசாலையிற் சேரவிரும்புவோர் அடுத்த ஆனிமீ 30-ந் தேதியின் முன் விண்ணப்பஞ் செயற்பாலர் விண்ணப்பப்பத்திரங்களும் வேறுவிபரங்களும் அக் கலாசாலை அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

எல். மெக்டி ரூபிசன்
பகில் வித்தியாதிகாரி

1936-ம் ௵ சித்திரை மீ 29-ந் தேதி
G 16, 14 & 28-5-36

# வெளிநாடுகளில் தேசிய மகாசபை பிரசாரஞ் செய்யவேண்டுமா?

## பண்டித ஜவஹர்லாலின் அறிக்கை

**ஜப்பான் இந்தியாமீது பாய்வதற்கு முன் ஒருபுறம் அமெரிக்கா, மற்றொருபுறம் சீனு, இன்னொருபுறம் சோவியத் குடியரசு, ஆகிய இவற்றைச் சமாளித்தல் வேண்டும்:**

அலகபாத், மே 16— லண்டனில் பிப்ரவரி 4-ந் தேதி பண்டித ஜவஹர்லால் இந்தியச் சமாஜக் கோஷ்டியினரோடு கலந்து பேசிய விஷயத்தைப் பற்றி மூன்றாவது அறிக்கை வருமாறு:—

அந்நிய நாட்டில் பிரசாரம்.

பண்டித ஜவஹர்லால் கூறியதாவது:—

இந்தியாவைப் பற்றிய உண்மைகளைச் சரிவர அறிவித்து லண்டனில் ஒரு ஏஜென்ஸி ஏற்படுத்த வேண்டியது அவசியமில்லையா எனக் கடைசியாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அது அவசியம் தான். அதை ஒருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் என்றே நம்புகிறேன். சென்ற 6 வருஷங்களில் நான்கு வருஷங்கள் வரை காங்கிரஸ் சட்டவிரோதமான ஸ்தாபனம் எனப் பகிரங்கப் படுத்தப்பட்டிருந்தது மீண்டும் நமது காரியங்கள் சட்டவிரோதமானவை யென எந்த நிமிஷத்திலும் சொல்லப்படக்கூடும். எங்கள் சொத்துக்களையெல்லாம் அப்போது பறிமுதல் செய்தார்கள். ஆனால் இப்போது சாதாரணமுறையில் அந்நிய நாட்டில் ஒரு ஏஜென்ஸி ஏற்படுத்துவது கஷ்டமாகவிருக்கிறது. எப்படியும் அந்நிய நாட்டில் ஏஜென்ஸி ஏற்படுத்த நான் வழிதேடுவேன் என்றார். பிறகு அவரைச் சிலர் கேள்விகள் கேட்டார்கள். அவற்றிற்குப் பண்டிதர் பதிலளித்து வந்தார்.

### கேள்வி பதில்கள்

பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வந்து விட்டால் ஜப்பானுக்குத்தான் சவுகரியமேற்படும். இதற்கு முன் இவ்வித சந்தர்ப்பத்தில் ருஷியாவின் பெயரைச் சொல்லுவதுண்டு. இப்போது ஜப்பானைப் பற்றித்தான பேசுகிறார்கள். இதைப்பற்றிப் பண்டிதரின் அபிப்பிராயம் இன்னதென மிஸ்டர் அலெக்ஸாண்டர் கேட்டார்.

பண்டித நேரு:— இவ்விதங் கூறுபவர்கள் இந்திய விஷயத்தில் ஜப்பானின் பிற்கால நிலை எவ்விதம் இருக்கும் என்பதை உணராதவர்கள் ஆவர். ஜப்பான் எவ்விதம் இந்தியாவுக்கு வரும்? சீனு முழுவதையும் அடிமைப்படுத்தி விட்டு ஜப்பான் இந்தியாவுக்குள் வந்துவிடுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்? இந்தியாவிலிருந்து ஜப்பானுக்குப் போவதற்கு இங்கிலாந்திற்குப் போவதைவிட அதிக நாளாகும். ஜப்பானியர் சுலபமாக இந்தியாவுக்கு வந்துவிட முடியாது. சீனவைக் கடந்து ஜப்பான் வருவதானால் கஷ்டங்கள் பல இருக்கின்றன. சீனவை முதலில் அது தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டும் அது சாமான்ய காரியமா? சீனவைக் கைப்பற்றுவதென்பது பெரிய பிரச்சினையாகும். சீனு ஒரு வழியிற் சற்றுப் பலங் குறைந்தாகவிருந்தாலும் மற்ற அம்சங்களில் அது அபாரசக்தி பெற்றிருக்கிறது. சீனத்தலைவர்களிற் சிலர் சீனவுக்குத் துரோகம் செய்ததால்தான பிறாது எதிர்ப்புக்கு அது ஆளாகியது. ஒருபுறம் அமெரிக்கா மற்றொரு புறம் சீனு; இன்னொருபுறம் சோவியத் குடியரசு இந்த மூன்றையும் சமாளித்துக் கொண்டு ஜப்பான் இந்தியாமீது பாய்வதென்பது அசாத்தியம். அத்தோடு ஜப்பான அவ்விதம் செய்தாலும் இந்தியா சும்மா விருக்காது. இந்தியாவுக்கு விசேஷ பலமில்லாவிட்டாலும் தற்காப்புக்காக அது ஏற்பாடு செய்து கொள்ளும் என்றார்.

பிறகு எல்லைப்புறத் தொல்லையைப் பற்றியும் இந்தியப் பாதுகாப்பைப் பற்றியும் மிஸ்டர் பிராட் கேள்வி கேட்டார். அதற்குப் பண்டித ஜவஹர் அளித்த பதிலின் சாரமாவது: ஆப்கானிஸ்தானம் முன்னேற்றமடையாத பிரதேசம் கைத்தொழிலில் அது பின் தங்கியிருக்கிறது. அந்தப் பிரதேசத்தைக் காத்துக் கொள்வதற்குப் போதிய ராணுவம்தான் அங்கு இருக்கிறது. ஆப்கானிஸ்தானம் படையெடுத்து வருவது என்பது ஆகாத காரியம். ஆகவே அதை அப்படியே விட்டு விடுவோம்.

சோவியத் ருஷியாவில்தான் இப்போது பூரண திருப்தி ஏற்பட்டிருக்கிறது. வலுவில் பிறரைத் தாக்க அது மனங் கொள்ளாது. இதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். அந்நியநாட்டிலாகா மந்திரி மிஸ்டர் ஈடனும் இவ்விதமே சொல்லியிருக்கிறார்.

மிஸ்டர் பிராட்:— ஆனால் இந்தியாக் கவர்ன்மெண்டார் இதை ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் வேறுமாறான அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

பண்டிதர்:—அவ்விதம் நினைப்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அவற்றை நீங்கள் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். சோவியத் ருஷியா பொருளாதாரத் துறையில் இந்தியாவை நாட வேண்டிய காரணமில்லை மூலப் பொருள்கள் ஏராளமாக ருஷியா பிரதேசத்தில் கிடைக்கிறது. இந்தியாவை இப்போது ருஷியா கைப்பற்ற நினைத்தால் அதில் எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. அதோடு பிற்காலத்தில் என்ன நடக்கப் போகிறதென்பதை இப்போது யூகித்துச் சொல்ல முடியாது. ஐரோப்பிய நாடுகள் பல இப்போதும் ருஷியாவைக் கண்டு பயப்படுகின்றன. நான் ருஷிய அரசியல் முறையை விரும்புகிறேன். அடுத்துள்ள பிரதேசத்தோடு நாம் சிநேகபாவமாக விருக்க வேண்டும் அந்த அரசியல் முடிவு இந்தியாவுக்கும் கிடைக்குமென நம்புகிறேன். அரசியல் முறை எவ்விதமிருந்தாலும் அபேதவாதக் கட்சியினரானாலுஞ்சரி, மற்றக் கட்சியினரானாலும் சரி எல்லைப் புறத்தைக் காக்க அவர்கள் முயற்சி செய்ய வேண்டியதுதான்.

மிஸ்டர் பிராட் :— யாருக்குப் பயந்து எல்லைப்புறத்தைக் காப்பது?

பண்டிதர் :— யாராயிருந்தாலுஞ் சரி, ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால், உலகில் முதலாளிகள் பிரதேசங்கள் பலவாகப் பெருகிவிட்டால் ராணுவம் முதலிய பந்தோபஸ்து அவசியம் இருந்தாக வேண்டும். எல்லைப்புறத்திலிருந்து இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படாமல் தடுத்துக்கொள்வது மிகச் சுலபம். வடமேற்கிலிருந்து இந்தியாவைப் பலர் படையெடுத்ததாக சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சரித்திரத்தில் சற்று மிகைப்படுத்திக் கூறியிருப்பார்கள். சுமார் 3000 வருஷங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் படையெடுப்புகள் அடிக்கடி நேர்ந்திருப்பதாகச் சொல்லமுடியாது. இந்தியாவில் உள்நாட்டுச் சச்சரவு இருந்ததால்தான் அந்தப்படையெடுப்புகள நடந்தன. அப்போது எதிரிகள் தாராளமாக உள்ளே நுழைந்துவிட்டார்கள். பிரான்ஸ் தேசம், ராணுவ பலம் அதிகமாகப்பெற்றிருந்தாலும் படையெடுப்புக்கு அதிகமாகப் பயப்படுகிறார்கள். நாஜிகள் எதிர்ப்புக்கு பிரான்ஸ் அஞ்சுகிறது. ஆனால் பிரான்ஸில் நல்ல ராணுவமிருக்கிறது அப்படியிருந்தும் அச்சம் அதிகமாக விருக்கிறது.

### தேசிய இயக்கமும் ஸ்திரீகள் உதவியும்.

பண்டித ஜவஹர்லால் நேரு:— சென்ற 15, 16 வருஷங்களில் இந்திய ஸ்திரீகள் எங்களது தேசிய இயக்கத்தில் வெகுவாகப் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனர் 1630-ம் வருஷத்தில் மகாத்மா காந்தி உப்பு வரி சம்பந்தமாக சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். அந்த இயக்கத்தின் மிக்க முக்கியமான விசேஷமாசம் யாதெனில் அதில் ஸ்திரீகள் வெகுவாகக் கலந்துகொண்டதேயாகும். ஆடவர்கள் சிறையில் இருந்தபோது ஸ்திரீகள் வலுவில் முன்வந்து இயக்கத்தைத் திறம்பட நடத்தியதைக்கண்டு எங்களில் பலர் பிரமித்துப் போனோம். அவர்களில் பெரும்பாலோருக்குப் பொது வேலைகளில் அனுபவமில்லாவிட்டாலும் அவர்களில் நல்ல நிமணிகள் விளங்கினர். அவர்கள் ஆடவரது உதவியின்றியே சட்டமறுப்பு இயக்கத்தை வெகு காலம் நடத்தினர். அவர்கள் இயக்கத்தைத் திறம்பட நடத்தியதுமட்டு மின்றி ஆடவரை விட அதிக உறுதியாகவும் விட்டுக்கொடுக்காமல் பிடிவாதமாகவும் நடத்தினர்கள். அதைப் பார்த்த பிறகு இனி இந்தியாவின் பொது வாழ்க்கையில் ஸ்திரீகள் கீழ்ப்பட்ட ஸ்திதியை வகிக்கப் போகின்றார்களென்று துணிந்து கூறக்கூடியவர் எவரேனும் இந்தியாவில் இருப்பாரென நான் நினைக்கவில்லை. அவர்கள் முன்போலவே இன்னும் பலசமூக அசௌகரியங்களுக்குள்ளாகிக் கஷ்டப்படுகின்றனர். இவை பாதி மதசம்பந்தமான அசௌகரியங்களாகும். ஆவர்கள் அந்த அசௌகரியங்களை நீக்க முடலவேண்டும். அவர்கள் இதில் ஆடவரை ஓரளவு எதிர்க்க வேண்டியிருக்கிறது. சில வைதிகர்கள் இந்த அசௌகரியங்களை ஸ்திரீகள் நீக்கவொட்டாமல் அவர்களைத் தடுக்க முயன்று வருகின்றனர். ஸ்திரீகளுக்கு அவர்கள் எடுத்துக்கொண்ட வேலையின் தன்மை தெரியும். எவரும் அவர்கள் அவ்வேலையில் சித்தி பெறுவதைத் தடுக்க முடியுமென்று நான் நினைக்கவில்லை. ஏராளமான ஸ்திரீகள் தேசிய இயக்கத்தில கலந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் எந்தத் தேசிய வாதியும் அவர்களை ராஜீயத்துறையிலோ அன்றி சமூகத்துறையிலோ கீழ்ப்படுத்தி வைக்க எண்ணவே முடியாது. கராச்சி காங்கிரஸ் நிறைவேற்றிய ஜீவாதார உரிமைத் தீர்மானம் ஸ்திரீகளுக்குள்ள அசௌகரியங்களை எல்லாம் நீக்க வேண்டுமென்றும், ஸ்திரீகளுக்கு அரசியலில் பூரண சமத்துவமளிக்க வேண்டுமென்றும் கூறுகிறது. ....(வரும்)

### சங்கானை ஒற்றுமைச் சங்கம்

மேற்படி சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவுவிழா நிகழும் தாதுவருடம், வைகாசி மாதம் 8-ந் திகதி (21-5-36) வியாழக்கிழமை அரசாங்கசபைத்தலைவர் கௌரவ வை துரைசுவாமி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

பிற்பகல் 6½மணியளவில் தலைவரவர்கள் சங்கானைச் சந்தியிலிருந்து சங்க அக்கிராசனர் திரு. S. நசலிஸ் வைபித்திலிங்கம் அவர்களால் மாலையிடப்பட்டு மேளவாத்தியத்துடன் அதற்கென அலங்கரிக்கப்பட்ட சிவப்பிரகாசவித்தியாசாலை மண்டபத்திற்கு அழைக்கப்பட்டார்.

பிற்பகல் 7 மணிக்குக் கூட்டம் தேவாரத்துடன் தொடங்கியது.சங்க உபதலைவர் திரு. ச. சிவசம்பு அவர்களால் வரவேற்புரைநிகழ்த்தப்பட்டு,தலைவரவர்கட்கு மாலையிடப்பட்டது. அதன்பின்னர் தலைவர்கள் பொருள் பொதிந்த பேருரையை நிகழ்த்தினர். காரியதரிசி திரு S. ஆறுமுகம் அவர்களால் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டபின்னர், திருவாளர்கள் S. நடேசபிள்ளை B.A; B.L; F R. E. S; M. S. C; V. வீரசிங்கம் B.A. பிரதம ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி; T. N. சுப்பையா, Proctor S. C. முறையே "சைவசமயமாட்சி" "கிராமப்புனருத்தாரணம்" "வீரர் வழிபாடு" என்னும் விஷயங்களைப் பீடிகையாகக்கொண்டு இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

S. நசலிஸ் வைபித்திலிங்கம் அவர்களால் தலைவர்கட்கும், பிரசாரகர்க்கும் நுதி கூறப்பட்டபின்னர் கூட்டம் பிற்பகல் 9½ மணிக்குத் தேவாரத்துடன் சமாப்தியாயிற்று. —நிருபர்

## உலகம் பலவிதம்.

—o—

நமது அரசினர் வருமானவரியென்னும் வேறு பல வரிகளென்னும் இங்குள்ள சனங்களிடமாக அறவிட்டு அப்படி வந்த பணத்தை என்னவிதமாகச் செலவிடுகின்றனரென அறிய விருப்புகிறீர்களா? சொல்லுகிறேன்; கேளுங்கள். வெருவலியில் வசிக்கும் மிஸ்டர் J. B. M. பெரிரா என்பவருடைய கோழிகள் இரண்டை ஒருவன் திருடிவிட, அவர் கழுத்துறைப் பொலிஸ் நிலையத்தில் வழக்குத் தொடர்ந்தார். கோழிகள் இரண்டின்விலை ரூபா 3. இந்த வழக்கிலே பல சாட்சிகள் சம்பந்தப்பட்டிருந்தபடியால் பலமுறை விளக்கத் தவணையிடப்பட்டதாம் சாட்சிகளுக்குச் செலவு 'பற்று' கட்டப்பட்டதாம். இப்படிக் கட்டப்பட்ட பற்றுவின் தொகை ரூபா 500; இவ்வழக்கு விஷயமாக சேர்ந்த ஏனைய செலவுகளும் ரூபா 500. இந்த மூன்று ரூபாக் கோழிவழக்குக்கு 1000 ரூபா அரசிறை வருமானத்தில் எடுத்துச் செலவிடப்படுமானால் இலங்கைமக்கள் ஈடேறுவதற்கு இனியென்ன தடையிருக்கிறது? இதுமாத்திரமா, கோழி திருடியவனுக்கு இரண்டு வருடக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டது. இந்த 2 வருடகாலமும் இவனுக்குச் சாப்பாட்டுச்செலவு எவ்வளவு, இவனைக் காவல்செய்யும் சிறைச்சாலை யதிகாரிகள் சம்பளமென்ன?

* * *

"நாய்க்கு நடுக்கடலிற்போனாலும் நக்குந் தண்ணீர்தான்" என்று ஒரு பழமொழி எங்கள் நாட்டில் வழங்குகின்றதல்லவா? அந்தப் பழமொழி சென்ற வாரம் கொழும்பிலே புகைரதப்பகுதியில் உண்மையாக நடந்திருக்கிறது. கொழும்புப் பகுதியிலே சென்றவாரம் பெருமழை வெள்ளப்பெருக்கு என்னுமிவைகள், சென்ற இருபத்தெட்டு முப்பது வருடகாலங்களுக்கு இல்லாத விதமாகக் காணப்பட்டவல்லவா? இடைவிடாமல் மழை பெய்கிறது. எங்கே பார்த்தாலும் வெள்ளமயம்; புகைரதப் பாதைகளிற் பல பாகங்களை வெள்ளம் மூடிக்கொண்டது. இப்படியான நிலைமையில் இருக்கும் போது களனியாப் புகைரதத் தானத்திற்கு அணித்தாக ஒரு புகைரதத் தொடர் ஓடிக்கொண்டு போய் இடையில் நின்றுவிட்டது. தண்ணீரில் நின்ற சாரதியும் காவலனும் யந்திரம் இயங்காது தடைப்பட்டு நிற்பதற்கு ஞாயம் என்ன என்று பார்த்தார்களாம். யந்திரத் தொட்டியில் நிறுத்தப்பட்டிருந்த தண்ணீர் பற்றற வற்றியிருப்பக் கண்டார்களாம். இதற் கிடையிற் பிரயாணிகள் இறங்கி வந்து புகைரதந் தடைப்பட்டு நிற்பதற்கு ஏது என்னவென்று சாரதியை வினவிய போது தண்ணீர்த் தொட்டியிலே கொஞ்சமும் தண்ணீர் இல்லை என்று சொல்ல, எல்லாரும் பெருஞ் சிரிப்புச் சிரித்தார்களாம். எங்கும் வெள்ளப்பெருக்கா யிருந்தாலும் புகைரத யந்திரத் தொட்டியில் தண்ணீர் நிறைப்பதற்கு அதற்கென வசதிகள் செய்யப்பட்ட ஒரு புகைரத ஸ்தானத்திற்கல்லவா யந்திரம் போய்ச் சேரவேண்டும். எல்லாரும் நெடுநேரம் நின்று யோசித்துவிட்டுப் பிறகு வாளிகள் கொண்டு வெள்ளத்தை மொண்டு யந்திரத் தொட்டியை ஒரு அளவிற்கு நிறைத்தனராம். பல மணி நேரஞ் சென்றபின் அந்தப் புகைரதம் ஒரு தானத்தை அடைந்ததாம். ஒரே நேரத்திலே தண்ணீர் அதிகப்பட்டமையினாலும் தண்ணீர் இல்லாமையினாலும் புகைரதத்திற்கும் பிரயாணிகளுக்கும் சங்கடமும் காலதாமதமும் சேர்ந்ததையிட்டு நினைத்துச் சிரிப்பதா? அழுவதா?

## மதிப்புரை.

### புலியூர்ப்புராணம்

சிதம்பர தலத்தின் மகத்துவங்களைக் கூறும் புராணங்களுள் ஒன்றாகிய இப் புலியூர்ப் புராணம், யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை வித்துவான் பிரமஸ்ரீ சிவானந்தையரவர்களாற் பாடப் பெற்றது. இதற்கு ஆதாரமாகக் கொண்ட முதனூல்கள் சூதசங்கிதை, வாசிட்டலிங்கம், பவிடியோத்தரபுராணம், காந்தம என்று மிவையாகுமென நான்முகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கறிஞரும் தமிழ் அபிமானியும் திருக்குறள் சைவசித்தாந்த சாத்திரங்களின் ஆராய்ச்சி பெரிதுமுடையவரும் சமயம் சாதி தேசம் பாஷையென்னுமிவைகள் விஷயமாகத் தாம் அறிந்தவற்றையும் அநுபவத்திற் கண்டவற்றையும் இந்நாட்டு மக்கட்குப் பயன்படும் வண்ணம் பரோபகாரசிந்தைபூண்டு காலந்தோறும் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்டும் இடங்கள்தோறும் சென்று பிரசங்கஞ் செய்தும் விளங்கியவரும், சாவகச்சேரியிலுள்ள பழைய சிவஸ்தலமாகிய வாரிவநநாத சுவாமி கோவிலைப் புதுக்குத் திருப்பணியின் பொருட்டுப் பெரிதும உழைத்தவரும் சைவாசார அநுஷ்டானங்களிற் சிறிதும் பிறழாதவருமாகிய தெல்லிப்பழை திரு. க. தம்பையபிள்ளை யவர்கள் வேண்டுகோட்கிணங்கி ஆசிரியர் இந்நூலை இயற்றினரென்பது இந்நூற்பாயிரமுகத்தான் அறியக்கிடக்கின்றது. இதன்கண் நாட்டுப்படலம், நகரப்படலம் நைமிசாரணியப் படலம் என்னுமிவைகளைத்தவிர, சிவலிங்க பூசனைப் பயனுரைத்த படலம் முதலாகத்திருவாதிரைவிரதப்படலமீறாகப் பதினேழுபடலங்கள் உள்ளன. செய்யுட்கள் 1205 ஆகும். பாக்கள் சொன்னயம் பொருணயம் பொலிந்தனவாய் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் நவின்றோர்க்கினிமை முதலிய அழகுகள்வாய்ந்தவாய் கச்சியப்ப சிவாசிரிய சுவாமிகள் போன்ற பழைய பௌராணிகர்களின் நடையைத் தழுவினவாய் ஆக்கப்பட்டுள்ளன வெனலாகும்.

இந்த அரியநூலை அச்சுவாகனம் ஏற்றுவித்த உத்தமி ஸ்ரீ தம்பையா அவர்களின்பத்தினியாராகியஸ்ரீமதி பவளநாயகியம்மையாரவர்கள்தமது பிராணநாயகரது ஞாபகார்த்தமாகவே இதனை அச்சிடுமவண்ணந் தூண்டினரென்பது முகவுரையிற்காணக்கிடக்கின்றது. இப்பெண்ணாரின் பதிபக்தியும் செந்தமிழபிமானமுஞ் சாலவும் மெச்சற்பாலன. இதனைத் தமது திருஞானசம்பந்த அச்சியந்திரசாலையில் முகவுரைமுதலியன எழுதி நன்கு அச்சிட்டவர் தமிழறிஞரும் சித்தாந்த சாஸ்திர ஆராய்ச்சியாளரும் பரம்பரை ஆயுர்வேத வைத்தியருமாகிய ஏழாலை ஸ்ரீ ஐ பொன்னையபிள்ளையவர்களாவர். யாழ்ப்பாணத்தில் அறிஞர்களாற் பாடி அச்சுவாகனமேறாது காலகதியில் அருகி இல்லாதொழியும் நிலைமையிலுள்ள அரிய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திப் பயன்பெறச் செய்தலாகிய புண்ணியம் ஸ்ரீ பொன்னையபிள்ளையவர்களைச் சேர்வதாகும். இப்புராணம் அச்சானபின் தெல்லிப்பழையிலுள்ள ஒரு விநாயகராலயத்தில் கௌரவ ஸ்ரீ வை. துரைசுவாமியவர்களைத் தலைமையாகக்கொண்ட அறிஞர் அவையத்துச், சென்றவாரம் அரங்கேற்றப்பெற்றதெனவும் அறியலானேம்.

இந்நூலை எமக்கு உதவிய பிரசுரர். திரு கனக[illegible]வர்கட்கு நன்றி கூறுகின்றேம்.

### ஒரு சூலில் 17 குட்டி

ஹாம்ஸ் டெட்டில் சார்மீல்டு தோட்டத்தில் ஒரு நாய் 17 குட்டிகளை ஈன்றது யாயமாகப் பெற வேண்டுமா நாளுக்கு முன் (ஆறு நாள் முன்) பெற்றுவிட்டாலும் எல்லாக் குட்டிகளும் ஆரோக்கியமாயிருக்கின்றன.

## இந்துசாதன உதவிப் பத்திராசிரியர்

வீரகேசரி, தினகரன் என்னும் பத்திரிகைகளின் உதவியாசிரியராக விருந்து அநுபவம் பெற்றவரும், "சிவதொண்டன்" என்னும் சைவப் பத்திரிகையின் ஆசிரியராகவுள்ளவருமாகிய "ஸ்ரீ க. கி. நடராஜனவர்கள் இப்பொழுது இப்பத்திரிகையின் உதவியாசிரியராக நியமனம்பெற்றுத் தமது கடமையை இனிது செய்துவருகின்றர்.



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுவ௵
வைகாசிமீ ௧௫உ வியாழக்கிழமை

## "மன்னன் கோன்முறை அரசு செய்க"

சென்ற இரண்டு மூன்று வருடந் தொடக்கமாக நமது இலங்கை நாட்டில் இடையிடையே சோள்ளை நோய் தொற்றுநோய் முதலியனவும் பெருமழை அகாலமழை வெள்ளப் பெருக்கு பிரசண்டமாகுத மேனட்படும் பெருங்காற்று மழையில்லாமை பஞ்சம் முதலிய அநர்த்தங்களும் மாறி மாறி நேர்கின்றன. நிகழ்ந்த இரண்டுமாச காலத்துள் அநுராசபுரத்திலே சோள்ளைநோய்த் திகிலும் மட்டக்களப்புப் பகுதியிற்பேதிநோய்ச் சங்கடமும் ஆங்காங்கு உள்ளாரைப் பெரிதும் உபாதித்தன; இற்றைக்கு ஒன்றரை வருடங்கட்குமுன் வடமாகாணம் கீழ்மாகாண மென்னும் இரு மாகாணங்களையும் ஒழிந்த ஏனைய மாகாணங்களிற் பரவிச் சனங்களுட் பலரை மரணத்திற்கு இரையாக்கியும் இன்னும் பலரை நித்திய பேலவீனர்களாக்கியுந் தீங்கு விளைத்த நவீனமான காட்டுக் காய்ச்சலைப்பற்றி இப்பொழுது நினைத்தாலும் உள்ளம் கம்பிக்கும்.

இனி இச்சமயத்தில் அதாவது பத்துநாள் தொடக்கமாக மேல்மாகாணத்திலும் மத்தியமாகாணம் முதலிய சில மாகாணங்களிலும் பெய்த பெருமழையும் வெள்ளப்பிரவாசமும் இவற்றால் நேர்ந்த ஆற்றுப் பெருக்கும் இவற்றோடு கூடிய புயல் எனப்படும் பெருங்காற்றும் செய்துவருங் கேடுதியும் ஆக்கிவருந் திகிலும் கொஞ்சமல்லவே! இவைகள் காரணமாக, பிரதானமாக மேல்மாகாணத்திலே உயிர்ச்சேதம் பொருட்சேதம் பேராபத்துக்கள் இன்னும் சொல்லக்கூடிய அநர்த்தங்கள் எவைகளோ அவைகளெல்லாம் நேரலாயின. துறைமுகத்திலும் கடலிலுமுள்ள கப்பல் தோணி வள்ளம் கட்டுமரம் முதலாம் மரக்கலங்களெல்லாம் நிலைகுலைந்தன; பரதவர் சிலர் ஆபத்திற்குள்ளாயினர். கப்பற் பிரயாணம் காலதாமசமாயிற்று ஆனால் மழை வெள்ளம் காற்று என்னும் இவைகளால் தரையில் நேர்ந்த அநர்த்தங்கள் இன்னும் பதின்மடங்காகுமென்னை மிகையாகாது. கொழும்புப் பட்டினத்திலும் அயலிலும் உள்ள பள்ளநிலங்கள் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. பல்லாயிரக் கணக்கானோர் குடியெழும்பி நடுத்தெருவில் நின்று தியங்கலாயினர்; சிலர் மரங்கள் தம்மேல் விழ்ந்தமையினாலும் வீடுகள்மீது மரம் விழ உளளே படுத்துக்கிடந்தோர்மீது வீடு விழ்மாண்டனர். புகைரதப் பாதைகள் பிரசித்த தெருக்கள் ஏனை[illegible]தெருவீதிகள் முதலாம் மார்க்க[illegible]ம் பெரும்பாகம் வெள்ளத்தின் கீழ்பட, புகைரதப் போக்குவரவு, மோட்டாரதம் முதலாம் எவ்வகையான ரதங்களின் சஞ்சாரம் எல்லாம் தடைப்படலாயின; மோட்டாரதங்களும் வண்டிகளும் ஓடிய மார்க்கங்களில் வள்ளங்களும் கட்டு மரங்களும் ஓடலாயின. "தெலிவோன்" கம்பிகள் தந்திக் கம்பிகள் மின்சார வெளிச்சக் கம்பிகள் ஆகிய இவைகளெல்லாம் தம்மீது விருட்சங்கள் விழ்ந்தமையினால் இடந்தோறும் அறுந்து போயின. சில இடங்களிற் புகைரதப் பாதையும் தெருவீதியும் வாராவதிகளும் வெள்ளத்தில் அள்ளுண்டுவிட அந்த இடங்கள் பெரிய கிடங்காயின, இவை மாத்திரமல்லாமல் களனிகங்கை நாளுக்கு நாள் வெள்ளப் பெருக்கு ஏறியும் இறங்கியும் வருதலினால் அரசினரும் சனங்களுமாகிய எல்லாரும் அச்சமுற்று இரங்கலாயினர். சுருங்கச் சொல்லுகில் இலங்கையின் இராசதானியென்று வழங்கும் கொழும்புப் பட்டினத்திலும் எல்லைப் புறங்களிலும் வசிக்குஞ் சனங்களில் ஒரு பெரும் பகுதியார் உண்ண உணவுமின்றி மாறியுடுக்கத் துணியுமின்றி ஒதுங்கியிருக்க வீடுமின்றி அவலப் படுகின்றார்கள் என்பதாம். நமது அரசினரும் அதிகாரிகளும் சனங்களுக்கு நேர்ந்த இப்பேராபத்துக்களை நீக்குதற்குத் தம்மால் இயன்றவரையில் முயற்சி செய்கிறார்கள்; பாடுபடுகிறார்கள்; இதற்குமேல், பாபம்! அவர்களாற்றான் யாது செய்ய முடியும்!

பஞ்சபூதங்களுள் அப்பு வாயு என்னும் இருபெரும் பூதங்களாலேயே இப் பேராபத்து நேர்தலாயிற்று இந்த இரண்டு பூதங்களையும் வெல்ல, இல்லையேல் அடக்கியாள முஸோலினி, ஹேர் ஹிட்லர் என்னும் இவர்களாலும் முடியாது. இப் பூதங்கள் இலங்கையில்மாறுபட்டு இப்படியான அநர்த்தங்களையெல்லாம் விளைத்து அரசினருக்கும் சனங்களுக்கும் அதிக பொருட்செலவையும் கேட்டினையும் விளைக்கக் காரணமென்னையோ என்பதுதான் சிந்தனைக்கு இடமானது.

நமது அரசினர் சென்ற சில வருடகாலமாக அரசியற் பொறுப்பை அரசாங்கசபையிற் சுமத்திவிட்டு வாளாவிருக்கின்றனர். அரசாங்க சபையினரோ காலந்தோறும் புதியபுதிய வரிகளையும் கட்டுப் பாடுகளையும் விதித்து வருகின்றதேயன்றிச் சனங்கள் ஈடேறுதற்காகிய கைத்தொழில் கமத்தொழில் வியாபாரம் என்னுமிவைகள்விஷயத்தில் யாதும் உதவி செய்யக் காண்கிலேம்; வருமானவரி பணமாவரிமுதலிய இவைகளெல்லாம் இலங்கை மக்களின் சீவாதாரமாகவுள்ள பணத்தை உறிஞ்சுவனவாகும். மேலும் மதுபானத்தைச் சனங்களுக்கிடையே பரவச்செய்து அரசிறை வருவாயை விருத்திபண்ணுவது போன்ற துரோகம் வேறுயாதும் இல்லையாகும். இது மாத்திரமா, இங்குள்ள சிறுவர் சிறுமியருக்கு அதிகாரிகள் ஊட்டிவரும் கல்வி வெறும்போலிக் கல்வியாகும். இதனால் இப் பிள்ளைகள் யாதும் உத்தியோகம் பெற்றால் வாழலாமேயொழிய வேறு எவ்வாற்றானும் பொருளீட்டுதல் இயலாதாகிவிட்டது. ஆனாலும் இப்படியான போலிக் கல்வியின் பொருட்டு அரசிறை வருவாயிற் செலவிடும் பணமும் பெற்றார்கள் செலவிடும் பணமும் கொஞ்சமல்ல சிங்கள மக்களாயுள்ளார் அதிகாரம் முழுவதையும் வெட்கம் நாணமில்லாமல் தங்கள் கைக்குள்ளே வைத்துக் கொண்டார்கள்.

இப்படியான பல குறைகள் இருப்பதாற்றான் கோள்ளைநோய் தொற்றுநோய் பெருமழை அகாலமழை வெள்ளப் பெருக்கு பெருங்காற்று மழையின்மை பஞ்சம் கள்ளர்பயம் கொலை முதலாம் தீமைக்கான உற்பாதங்கள் எல்லாம் ஒன்றொன்றாய் இங்கே விளைகின்றனவென்று காலங்கண்ட முதியோர் சொல்லிக் கவல்கின்றனர். இவைகளால் அரசினருக்கும் பிரசைகட்கும் நேருங் கஷ்டமும் பொருட்செலவுங்கொஞ்சமல்லவென்பதை மேலேகூறியுள்ளோம். இங்ஙனமாதலின் இப்பொழுதுள்ள அரசாங்கசபையைத் திருத்தி இலங்கைமக்களெல்லார்க்கும் ஒரே தன்மையான உரிமையும் நீதியும் கிடைக்கும்படியான முறையில் இந்த அரசாங்கசபையைத் திருத்தஞ் செய்து விட்டால் இப்படியான அநர்த்தங்கள் இல்லாதொழியும் என்று சொல்ல இடமுண்டு.

## மந்திரியார் தாமாகவே விலகிக்கொண்டார்

சில காலத்திற்கு முன்னர், பொதுஜன அபிப்பிராயம் காரணமாக, அக்கியநாட்டு மந்திரியாகவிருந்த ஸர். சாமுவல் ஹோர் தமது மந்திரிப்பதவியி லிருந்து நீங்கியதுபோலவே, தற்போது குடியேற்றநாட்டு மந்திரியாகவிருந்த மிஸ்ரர் ஜே. எச். தொமஸுமம் தமது பதவியை ராஜினாமாச் செய்துகொள்ள நேர்ந்துவிட்டது. பிரிட்டிஷ் வரவுசெலவுத் திட்ட இரகஸ்யங்கள் வெளியானமை சம்பந்தமாக விசாரணை நடைபெற்றது. இப்போது அவ் விசாரணை முடிவடைந்துவிட்டது. அதைப்பற்றி விசாரணை செய்த குழுவினர் எத்தகைய முடிவுக்கு வந்தனர் என்பது தெரியவில்லை. ஆயினும், அவ்விசாரணையின் பலனாகச் சில விஷயங்கள் மாத்திரம் வெளிவந்தன. அதன் பின்னரும் மிஸ்ரர் தொமஸ் குடியேற்ற நாட்டு மந்திரியாக இருப்பாராயின் பிரிட்டிஷ் மந்திரிசபைக்கே பெரிய அவமரியாதை ஏற்படும் என்பதிற் சிறிதேனும் ஐயப்பாடில்லை. இந்நிலைமையில் அவர் புத்திசாலித்தனமாகத் தமது பதவியைத் தாமாகவே விட்டு விலகியமை பாராட்டத் தக்கதாம். அவர், பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகிய மிஸ்ரர் பால்ட்வினுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தமது குடும்ப விஷயங்களையெல்லாம் பலரும் வெளியே பேசக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டமையால், தாம் இனிமேல் மந்திரிசபையி லிருக்கமுடியாதென்றும், அன்றியும் தாம் மந்திரிசபையிலிருந்தால், மந்திரிசபைக்கே பெரிய கஷ்டம் ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். மிஸ்ரர் பால்ட்வினும் அவரது செயலை அங்கீகரித்துப் பதிலெழுதும்போது "என் அருமை ஜிம்! நான் உங்கள் நிலைமையி லிருந்தால் இப்படியே செய்வேன்" என்று குறிப்பிடுகிறார். என்றாலும் சம்பிரதாய முறைப்படி அவர் வேலையினின்றும் விலகுவதைப் பற்றித் தாமும் மந்திரி சபையிலுள்ள பிறரும் வருத்தமுறுவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

மிஸ்ரர் தொமஸ், தமது கடிதத்தில் தெரிவித்துள்ள விஷயங்களிற் சில, விழுந்தவன் மீசையில் மண்படவில்லை என்றவிதமாக இருக்கின்றன. இவர் மிக நெருக்கடியான காலமாகிய 1931-ம் ஆண்டில் தமது சொந்தக் கட்சியையும் நட்டாற்றிற் கைவிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்தனர்; தேசிய அரசு முறையை ஏற்படுத்துதற்கு உதவி செய்தனர். அதில் தாமும் ஓர் அங்கத்தவராகினர். அந்த ஆட்சியின் பலன் இன்னது என்பது இப்போது எல்லவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல மிக நன்றாகத் தெரிந்துவிட்டது. அவ்வாட்சியின் பலனாக, உள்நாட்டில் தொல்லைகள் அதிகப்பட் டிருக்கின்றன. ஏழைகளுக்குப் பல இன்னல்கள் உண்டாகிவிட்டன. அவை நீங்குதற்கு வழியில்லை. இவை ஒருபுறமாக வெளிநாட்டு நிலைமையோ மிகவும் மோசம். வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை. ஐரோப்பாவில் யுத்தமேகம் மூடிக்கொண் டிருக்கிறது. இந்நிலைமையிலுங்கூட, இங்கிலாந்தில் தேசிய அரசாங்கமே இருந்துவரவேண்டும் என்று திரு தொமஸ் திருவாய்மலர்ந் தருளுகின்றார். இவர் தமது கட்சியின மீது மிக்க விசுவாசமுடையவராக இருத்தல்பற்றி நாம் அவரைப் பாராட்டுகின்றோம். ஆயின், இவரது கட்சியார் அதற்காக இவருக்கு நன்றியறிதலுடையவராக இருப்பார்களோ என்பதுமே சந்தேகமாகும் இவர் தமது வேலையினின்றும் விலக நேர்ந்தமைக்கு அக் கட்சியினரிற் பலர் காரணராக இருந்திருக்க மாட்டார்களோ எனவுங்கூடச் சந்தேகிக்க இடம் உண்டு. ஏகாதிபத்தியப் பித்துக் கொண்ட கன்ஸர்வேட்டிவ் கட்சியினரே நிர்வாக முறையிற் சிறந்தவர்கள் என்று பிறர் நினைக்குமாறு இவர் செய்தமை பெரிதும் வருந்தத் தக்கதாகும்.

மிஸ்ரர் தொமஸ் யந்திரம சுத்தம் செய்யும் வேலைபோன்ற மிகக் கீழ்தர உத்தியோகத்திலிருந்து தமது விடாமுயற்சியினாற் பலவித கஷ்டங்களுக் கூடாகவே மிக உன்னத பதவியைப் பெற்ற ஒருவராவர். இவர் இது வரையில் தமது வாழ்க்கையைக் கண்ணியமாகவே நடத்திவந்திருக்கிறார் என்று தெரிகிறது. இத்தகைய ஒருவருக்கு இவ்வித நிலைமை ஏற்பட்டமை வருந்தத்தக்கதேயாம். இவர் இப்பதவிக்கு வருதற்கு முன், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரியாக விருந்தார். அயர்லாந்து விஷயத்திலிருந்தும் வேறு பல விஷயங்களிலிருந்தும் இவர் அப் பதவிக்கேற்ற ஆற்றலோடு நிர்வகிக்கும் திறமையற்றவர் என்பது எவர்க்கும் தெரியலாயிற்று. இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மிஸ்ரர் பால்ட்வின தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டுமென்ற கொள்கையையுடையரா யிருந்தமையால் தொழிற்கட்சி அங்கத்தினர் ஒருவருக்கு மந்திரிவேலை கொடுக்க வேண்டியிருந்தது. மிஸ்ரர் ராம்லே மக்டொனல்டின் வேண்டுகோளின்படி, தேசிய அரசாங்கத்தை ஆதரித்து வந்துள்ள ஒருவராதலின் அதற்குக் கைமாறாக, அவர் குடியேற்ற நாட்டு மந்திரியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவரை அப்பதவியிலிருந்து நீக்குதற்கு வேறு வழியே கிடையாது. இந் நிலைமையில் அவர் தாமாகவே விலகிக் கொண்டமையாற் பெரியதொரு சங்கடம் தீர்ந்து விட்டதென்றே கூறலாம். இனியேனும் மிஸ்ரர் பால்ட்வின் இப்பதவிக்குப் போதிய அநுபவமும் ஆற்றலும் உடைய ஒருவரை நியமிப்பாரென எதிர்பார்க்கப் படுகிறது.

இப்பதவிக்கு மிஸ்ரர் ஆம்ஸ்பிகோர் வரலாமெனச் சிலரால் எடுத்துக் காட்டப்பட்டு வருகறது. இவர் பொதுத் தேர்தல் முடிந்த பின்பே குடியேற்றநாட்டு மந்திரியாக வரலாமெனமதிக்கப்பட்டது. ஆயின், மிஸ்ரர் தொமஸ் விலகிக் கொண்ட இந்த நிலைமையில் பொதுத் தேர்தல் வரை பொறுக்காமல் இவரே அப்பதவியை எடுக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. மிஸ்ரர் ஆம்ஸ்பிகோர் பல குடியேற்ற நாடுகளையும் அவற்றின் நிலைமைகளையும் நீடித்த அநுபவ வாயிலாக அறிந்த ஒருவர். ஆகவே, இவர் குடியேற்ற நாட்டு மந்திரியாக நியமிக்கப் படுவாராயின், ஏனையோரைக் காட்டிலும் இவர் சிறந்த முறையில் நிர்வாகம் நடத்துவார் என்றே கருதக்கிடக்கின்றது.

# அரிமாநோக்கு.

## இலங்கையில் மோட்டார்ச் சாரதிகள்

இலங்கையில் மோட்டார்ச் சாரதிகளின் தொகை மிக அதிகமாகிவிட்டது. சென்ற வருடம் மோட்டார்ச் சாரதிகளாதற்குத் தாரதரபத்திரம் பெற்றோர் தொகை 2,385. இதனோடு முன்னரே சாரத்தியத் தாரதர பத்திரம் பெற்றோரின் தொகையையுங் கூட்டினால் இலங்கையிலுள்ள சாரதிகளின்தொகை 42,025 ஆகின்றது சென்றவருடக் கடைசியில், இலங்கையிலிருக்க மோட்டார் வண்டிகளின் தொகை (பஸ், லொறி ஆகியன உட்பட) 27,052 ஆகும். இதிலிருந்து இலங்கையிலுள்ள மோட்டார் வண்டிகளின் தொகையைக் காட்டிலும் ஏறக்குறைய 15,000 பேர் அதிகப்படியான சாரதிகள் இருக்கின்றார்கள் என்பது வெளியாகின்றது. ஆகவே, இத்தனைபேருக்கும் வேலை கிடையாமற் போவது நூதனமாகாது. மோட்டார் வண்டிகளைச் செவ்வனே ஓட்டுதற்குப் போதிய அநுபவமில்லாதஆசாமிகள்கூட எவ்விதமோ தாரதரபத்திரம்பெற்றுவிடுகிறார்கள். பின் இவர்கள் செய்வதென்ன? மிகக் குறைந்த சம்பளத்திற்கும் வேலை செய்ய உடன்படுகிறார்கள். எங்கே மலிவான பஸ்அல்லது லொறிகளை ஓட்டிப் பிழைக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருப்போரும் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய ஒருப்படும் இந்த அநுபவமற்ற சாரதிகளை ஏற்படுத்துகின்றனர். இதன் பலனாக, நாட்டின் நானுபக்கங்களிலும் மோட்டார் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இதனைக் குறைத்தற்கு ஒருவழியாகச் சென்ற பெப்ரவரிமாதத்தில் மோட்டார்ச் சட்டங்கள் மாற்றப்பட, அதிலிருந்து மோட்டார்ச் சாரதிகள் வேலை நிறுத்தஞ் செய்தனர். அவ்வமயம் அச்சட்டத்திலேற்பட்ட மாற்றம் சிறிது அளவுக்குமிஞ்சிக் கையாளப்பட்டு விட்டதென்றே கருதப்படுகின்றது ஆயின் அரசாங்கசபையார் இதை நீக்குதற்கு இதற்கு நேர்மாறான வழியில் மிக அதிதூரம் சென்றுவிடாம லிருப்பதே உசிதமாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்கும்போது இக்கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு வழி என்ன? மோட்டார் வண்டிப் பதிவுகாரர் (Registrar of Motor Cars) ஒரு வழி கூறுகின்றார். சாரதிகளுக்குத் தாரதரபத்திரம் கொடுக்கும்போது அவர்களுக்குக் கடினமான பரீக்ஷை வைத்து அதிற் போதிய சித்தியை அடைபவர்களுக்கே தாரதரபத்திரம் கொடுத்தல் வேண்டும் என்பதே அவர் கூற்றாகும். இவ்வாறே தற்போதுள்ள சாரதிகளிற் போதிய ஆற்றலில்லாதவர்கள் தொகையைக் குறைத்தற்கும் இனிச் சாரதிகளாவோர் தொகையைக் குறைத்தற்கும் அவர் முயல்வாரென அறிகின்றோம். எவ்விதமும் நன்னிலை ஏற்படுவதே எங்களுக்கும் சந்தோஷமாகும்.

## அவநம்பிக்கை

தேசங்கள் தம்முள் அதிகமாக அவநம்பிக்கை கொள்ள ஆரம்பித்துவிட்டன. எந்த நேரத்தில் எது சம்பவிக்குமோ என்பது தெரியாமல் இருக்கிறது. இதனால் உள்நாட்டு விஷயங்களும் இரகசியங்களும் வெளிநாடுகளுக்குத் தெரியாமற்றடுப்பதற்கு ஒவ்வொரு தேசமும் தன்னாலானவரை முயன்று வருகின்றது. இந்நோக்கத்தோடு எகிப்திய அரசாங்கம் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம். அந்நியநாட்டு விஷயப் பகுதியிலும் அரசியல் விஷயப்பகுதியிலும் உத்தியோகஸ்தராயிருப்போர் இனிமேல் அந்நியநாட்டு மாதரை மணந்து கொள்ளக் கூடாதென்பதே அவ்வுத்தரவாகும். ஸ்திரீகள் மூலம் உள்நாட்டு இரகசியங்கள் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் இருக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம் போலும். இனிமேல் அப்பகுதிகளில் உத்தியோகஸ்தர்களாயிருப்போர் அவ்வாறு மணஞ்செய்யாதிருத்தல் முடியும். ஆயின் இதற்கு முன்னரே அன்னியநாட்டு மாதரை மணஞ்செய்து கொண்டோர் கதி எதுவாகுமோ தெரியவில்லை. இவர்கள் ஒருபோது தமது உத்தியோகங்களினின்று விலக நேரிடும் போலும். வெவ்வேறு தேசத்தார் தம்முட் கலந்து விவாகங்களைச் செய்துகொள்வது நல்லது என்னும் கொள்கையுடையோர் இதற்கு என்ன சொல்லுவாரோ தெரியவில்லை. தேசங்களுக்கிடையே இவ்வாறு அவநம்பிக்கை உண்டாகக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டமை விசனிக்கத்தக்கதேயாம்.

## மழை விட்டும் தூவானம் போகவில்லை

புண்ணியவான் வில்லிங்டன் பிரபு இந்தியாவை விட்டுப் போய் விட்டார். இனிச் சில காலத்திற்கு அவசரச்சட்டப் பாணங்கள் இந்திய மக்களைத் தாக்கா. அவர்கள் சிறிது காலத்திற்கேனும் ஆறுதலாக விருக்கலாம் என்று நினைத்து ஒருவாறு மூச்சு விட்டோம். ஆனால், விஷயம் அவ்வளவில் நின்று விட்டதாகத் தெரியவில்லை. மழை விட்டும் தூவானம் போகவில்லை என்ற விதமாகப் பிரபு வில்லிங்டனது சொல்லும் செயலும் இருக்கின்றன. ஐந்து வருடம் இந்தியாவில் அரிய சேவை செய்துதாய்நாடு திரும்பியுள்ள இப் புண்ணியவானுக்கு அங்குள்ள கிழக்கிந்திய சங்கத்தார் ஒரு வரவேற்புக் கொண்டாட்டம் வைத்தார்கள். வைக்கத்தானே வேண்டும். இதில், தமது பிரபுவின் தொண்டுகளெல்லாம் தனித்தனி எடுத்துப் பாராட்டிப் பேசப்பட்டன. பிரபுவும் ஒரு சொன்மாரி பொழிந்தார். அவரது முழக்கம் விண்ணெலாம் பரந்து இந்தியாவை அடைந்து இந்திய மக்களைத் திடுக்கிடச் செய்துவிட்டது. யாதப்பா அந்தப் பிரமாதமான முழக்கம் என்று கேட்கிறீர்களா? இப்பெருமகன் அமைதியற்ற இந்தியாவில் தாம் அமைதியையும் சமாதானத்தையும் உண்டாக்கி விட்டாராம். இதுதானா? தன்னைப் புகழாத கமயாளனுமில்லை என்றல்லவா

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# கோட்டுச் செய்திகள்

நமது நிருபர்.

## கத்திக்குத்து வழக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதியின் முன்னிலையில் உரும்பராயில் வசிக்கும் சரவணமுத்து என்பவரை 29ம் திகதியன்று அவ்வூரில் வசிக்கும் தங்கமுத்து என்னும் பெண்ணைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

சின்னத்தம்பி — வைத்தியலிங்கம் கூறியதாவது:—

நான் 20ம் திகதி வீட்டிருவிக்கும்போது குட்டிப்பிள்ளை வீட்டுப் பக்கமாக ஓர்சத்தம் கேட்டது. நான் அவ்விடம் ஓடிச்சென்றேன். இச்சதிரியைக் கண்டேன். இவர் தங்கமுத்துவுக்கு ஓர் கத்தியால் வெட்டினதும் நான் அவரைப்பார்த்து ஏன் வெட்டுகிறாய் என்று கேட்டேன் இதற்கிடையில் அவர் மற்றும் ஒரு முறை வெட்டிவிட்டு ஓடிவிட்டார்.

காயக்காரி இன்னும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக விருக்கிறாள். எதிரியை 160ரூபா பிணையில் விட்டு வழக்குத் தவணையிடப் பட்டது

அவ்வூர் பொலிஸ்விதானை சேதுகாவலர்—பொன்னம்பலம் வழக்குத் தொடர்ந்தார்.

அப்போது விதானையார் கூறியதாவது:— இச் சம்பவத்தைப்பற்றி வழக்காளி எனக்கு அறிவித்தார். இவ் வழக்குக்குச் சாட்சிகள் உண்டு. இச் சம்பவம் இரவு நான் நடந்தது.

இவ்வழக்கில் சதாசிவக்குருக்கள் கூறியதாவது:-

நான் சென்ற 25ம் திகதி இரவு நித்திரையாய் இருக்கும்போது கூக்குரல் சத்தம் கேட்டது நான் எழுந்து பார்த்தபோது இவ்வெதிரி ஓடிவதைக் கண்டேன். நான் அவனைப் பின் தொடர்ந்தேன். ஓர் அரிக்கன் லாம்பு எரிந்து கொண்டிருந்தது இவ்வெளிச்சத்தில் நான் எதிரியை மட்டிட்டுக்கொண்டேன். எதிரி வளவுக்குள் ஓடி ஓர் பொல்லை எடுத்துக்கொண்டுவந்து அடிக்க எத்தனித்தான். நான் ஓடிவிதானையாருக்கு அறிவித்தேன். என்னைவிட வேறு ஆட்களும் என்கள் வீட்டில் இருந்தார்கள். மனைவி தலைவாசலில் சான் நித்திரை செய்தாள். விதானையார் எதிரியின் வீட்டைச் சோதித்தவர். நான் விசாரணை வீட்டிலிருந்து திரும்பி வந்தபோது தலைவாசலில் மனைவி படுத்திருந்த கட்டிலுக்கு பக்கத்தில் அக்கொடியில மாட்டப்பட்டிருந்த (தாயத்து) அஷ்டாக்கூடு ஒன்றும் ஓர் தங்கப்பவுண் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன. எதிரி வருகிற 29ந் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறான்.

## றெயிலுக்கு எறிந்த சிறுவன்

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் 24–5-36 திங்கட்கிழமை பொலிஸ் சார்ஜன் பெரோரா என்பவர் ஒன்பது வயதுள்ள ஒரு சிறுவனைச் சென்ற 22ம் திகதி மாலை யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்குச் செல்லும் றெயில்வண்டியின் முதல் வகுப்புக் கதவுக்கண்ணாடியைக் கல்லால் எறிந்து ஓடும்போதே உடைத்ததாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார்.

எதிரி தான் சிறுவனென்றுப் தெரியாமல் குற்றம் செய்துவிட்டதாகவும் தான இனிமேல் ஒருபோதும் இப்படிச் செய்யப்போவதில்லை என்றும்சொல்லி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் நீதிபதி எதிரிக்கு 3அடி அடிக்குமாறு உத்தரவிட்டார்.

## அபின் வைத்திருந்த மாது
### 600 ரூபா அபராதம்

யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிபதியின் முன் இன்று மதுப்பரிசோதகர் திரு. பிறைசூடி கல்லுவெட்டித்துறையில் வசிக்கும் வைரி என்னும் ஒரு பெண்ணை ஒருரூத்தல் அபின் கொண்டு வல்லுவெட்டியி லிருந்து திருகோணமலைக்குப் போகும்வழியிற் பிடித்ததாக வழக்குத் தொடர்ந்தார். எதிரி தான் கொண்டுபோனது உடன்மையென ஒப்புக்கொண்டாள் என்றும் வேறொரு ஆள் தன்னைக் கொண்டு வரும்படி சொன்னதால் தான் கொண்டுபோனதாகச் சொன்னாள்.

நீதிபதி எதிரிக்கு 600ரூபா அபராதம் விதித்தார் அது கொடுக்கத் தவறினால் மூன்றுமாசம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படுமெனக் கூறப்பட்டது.

## சாராயம் விற்ற பெண்

யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதியின் முன் இன்று மதுப்பரிசோதகர் திரு பிறைசூடி வண்ணார்பண்ணை மேற்கில் வசிக்கும் சின்னத்தங்கம் என்னும் ஒரு பெண்ணை சோராபாகச் சாராயம் விற்றதாக ஓர் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கில் எதிரி தான் குற்றவாளியெனஒப்புக்கொண்டாள்.

நீதிபதி 200ரூபா அபராதம் அன்றேல் மூன்றுகிழமை கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## தாலிக்கொடித் திருட்டு

சென்ற 25–5–36 செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறையிலுள்ள கருவில் வசிக்கும் சதாசிவ ஐயரின் பனைவி செல்லம்மாவின் கழுத்திலிருந்த 400 ரூபா பெறுமதியுள்ள தாலிக்கொடி ஒன்றைச் சென்ற 25ம் திகதி இரவு நடுநிசியில் நித்திரை செய்யும்போது அவ்வூர் ஐயம்பிள்ளை தம்பு என்பவன் சென்று அறுத்துக் கொண்டோடியதாகக் குற்றஞ்சாட்டி

## கோட்டில் தடுமாறிய சாக்ஷி

மல்லாகம்கோட்டில் சென்ற 25-5-36 திங்கட்கிழமை மூளாயில் வசிக்கும்முத்துக்குமாரு பெண் கணிப்பிள்ளை என்பவளை அவ்வூரில் வசிக்கும் கன்னிப்பிள்ளையின் சகோதரன் சுப்பிரமணியமும் அவருடைய மக்கள் (1) இராமசாமியும் (2) நாகலிங்கமுமாகப் பொல்லுகளால் அடித்துக் காயப்படுத்தியதாக குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

கன்னிப்பிள்ளை கூட்டிலேறிச் சாட்சியம் கூறினபோது மயக்கமுண்டாய் விழப்போகும் சமையத்தில் அவளை வெளியே அனுப்பிவிட்டு அவளுடைய மகனாகிய முத்துக்குமாரு-பரமசாமி சாட்சியம் கூறியதாவது:-

"வழக்காளி எனது தாயார் சென்ற 18ம் திகதிகாலை 6 மணியளவில் இவ்வெதிரிகளும் எனது தாயரும் வளவுக்குள் இருக்கும் பங்குக்கிணற்றைப்பற்றி வாக்குவாதப்பட்டார்கள்." இப்படிக் கூறிவிட்டுச் சாட்சி மிகுதிச் சம்பவத்தைக் கூறப் பின்னே நின்றான். இதைக்கண்டதும் நீதிபதி எஞ்சிய சம்பவத்தையுங் கூறும்படி வற்புறுத்தச் சாட்சி தாங்கள் சமாதானப்பட்டதாக அறிவித்தான். நீதிபதி திரும்பவும் நெருக்கிக் கேட்டபோது சாட்சி கூறியதாவது:- "கையிலுள்ள காயம் ஓர் பழைய துலா அடித்த காயம் தலையிலுள்ளதுதான் புதுக்காயம். இச் சம்பவம் நடக்கும்போது நான் நித்திரையாய்க் கிடந்தேன். நான் விதானைக்கு இச் சம்பவத்தைப் பற்றி வாக்கு மூலம் கூறியிருக்கிறேன். இச் சம்பவம் நடக்கும்போது நான் அங்கேதானே இருந்தேன். இடையிலுள்ள வேறு சிலரே இச்சமாதானத்தைப் பேசினார்கள்." நீதிபதி "நீ உண்மை முழுவதையும் கூறாவிட்டால் மறியலுக்கும் போகவேண்டி நேருமெனபதை ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று கூறினார். இதன்பிறகு சாக்ஷி கூறியதாவது:— "இவர்கள் எல்லாரும் இச் சம்பவம் நடந்த இடத்திலுள்ள தடிகளை எடுத்து அடித்தார்கள்.

பொலிஸ் சார்ஜன் குறுக்கு விசாரணைசெய்தபோது அவர் தான விதானைக்கு உலக்கையால் அடித்ததாக அறிவித்திருந்த போதிலும் தடியால் அடித்ததே உண்மை என்றார். இவ் வழக்கு ஆனிமீ 1ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும். எதிரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

## அரிமா நோக்கு

4-ம்பக்கத் தொடர்ச்சி

சொல்லுவார்கள். அப்படியிருக்க லில்லிங்டன் பிரபு போன்ற ஒரு புண்ணியவான் தம்மைப் புகழ்ந்துகொண்டதுதானா பாதகம்? என்று கேட்கிறீர்களா? சரி போகட்டும் அவர் வேண்டிய அளவிற்குத் தம்மைப் புகழ்ந்து கொள்ளட்டும். ஆனால் இன்னும் என்னென்னவெல்லாம் அவர் கூறுகிறார் தெரியுமா? இந்தியாவுக்குப்புதிய அரசியல்முறை வருகிறதாம். வந்ததும் மந்திரிகள் தங்கள் சிர்வாகப் பொறுப்பிற் கருகதாச் செலுத்துவார்களாம். அதனோடு அரசியற்கிளர்ச்சி தானாகவே அடங்கி விடுமாம். ஏனையா இந்த ஜோஸியம்? இவர் தாமே இந்தியை விட்டுப் போனவராச்சே. பிறகும் ஏனையா இந்தக் குத்துமாட்டை விலை கூவாங்குகிறார். அவர்தஜோஸியத்தால் உங்களுக்கென்ன குறை வந்துவிட்டது? என்று கேட்கிறீர்களா? அதுவும் சரி ஐயா! ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், இவர் தற்போது வைசிராயாக வந்திருக்கும் லின்லித்கோ பிரபுவுக்கு ஒரு யுக்தி கூறுகின்றார். அது என்ன யுக்தி தெரியுமா? தற்போதுள்ள இராஜப்பிரதிநிதி சிவில்சர்விஸ் வர்க்கத்தாரது சொற்படி நடப்பதாகக் காட்டிக்கொண்டால் அவர்கள்மூலம் அரசாங்கத்தில் அதிகாரம் நிலைநிறுத்தப்படுமாம். இதுவன்றோ புத்தி? இதன்படி ஒழுகினால் இந்தியமக்களுக்குப் பிரிட்டிஷாரிடம் உள்ள அற்பமரியாதையும் பற்றும் அறவே ஒழிந்து விடும் என்பதிற் சந்தேகமே இல்லை. அடபுண்ணியவானே! இருந்தால் மனுஷர் இப்படியல்லவே இருக்கவேண்டும்? சாப்பாடும் சம்பளமும் கொடுத்தநாட்டிற்கு இப்படியல்லவோ கைம்மாறு செய்யவேண்டும்! போகட்டும். இக்குணம் இவருக்குப் பிறப்பிலேயே அமைந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம்.

ஆனால், இன்னொரு வேடிக்கையான விஷயம் நடந்தேறியிருக்கிறது. இப் புண்ணியவானுக்கு ஒருவர் எச்சரிக்கை, பராக்கு,வாழி என்னும் புகழ்மாரிகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சுமத்தி முறைப்படி வழிபாடுஞற்றியிருக்கிறார். இவர் யார் தெரியுமா? இவர்தாம் நமது இந்தியமந்திரி ஸெட்லாந்து பிரபு ஆவர். இவரது பாராட்டல்லவோபாராட்டு? இவரது லில்லிங்டன் பக்தியன்றோ பக்தி!

---

### காலநிலை

முக்கைநாட்டோடக்கமாக இங்கே தென்றற்காற்று வேகமாக வீசத்தொடங்கியிருக்கின்றது.

### தவில் வித்துவானுக்குச் சந்மானம்

வண்ணார்பண்ணையிலுள்ள கலாநிலையத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (24-5–36) பின்னேரம் யாழ்ப்பாணச் சங்கீத சமாஜத்தார், தென்னிந்திய வரையிற் பெயர்பெற்ற தவில் வித்துவானாகிய வண்ணார்பண்ணை, திரு. காமாட்சிசுந்தரமவர்களுக்கு, சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியராகிய திரு S. சோமசுந்தர பாரதியாரவர்கள் மூலமாக ஒரு தங்கப்பதக்கத்தைச் சந்மானமாக அளித்தனர். மேற்படி சங்கீத சமாஜத்தினர் செய்கை பின்பிற்றத்தக்கதாம்.

### விவாகம்

கந்தையா—பூரண அம்மாள்

வட்டுக்கோட்டை வாசரும் திரு. அ. நாகியவாயம் அவர்களின் புத்திரனும் கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் கடமை செலுத்துபவருமான திரு. க. கந்தையாவுக்கும் அவ்வூர் திரு: க. ஆறுமுகம் அவர்களின் புதல்வி ஸ்ரீமதி பூரண அம்மாளுக்கும் சென்ற புதன்கிழமை (27-5-36) சகல வைபவங்களுடன் விவாகம் நிறைவேறியது. மணமக்கள் பல்வகைச் சிறப்புக்களுடன் எல்லா நலன்களுமெய்தி வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

மேற்படி சுபமுகூர்த்தத்தில்சைவபரிபாலன சபைக்குத் தானமாக அனுப்பிய ரூ 2 ஐயும் மனமுவந்து ஏற்றுக்கொண்டாம்.

# குடியேற்ற நாட்டு மந்திரிசபைக்கு மனு

## இலங்கைக்கு 2-வது விசாரணைக்குழு ஒன்று வேண்டுமென யாழ்ப்பாணச் சங்கத்தார் வேண்டுகின்றனர்

## மூவகைக் குறைகள் உளவாம்

யாழ்ப்பாணம் மே 23

இலங்கையின் தற்கால அரசியல் திட்டத்தைமாற்றி யமைப்பது பற்றி விசாரணை செய்ய ஒரு விசாரணைக் குழுவினரை அனுப்பவேண்டுமென யாழ்ப்பாணச் சங்கத்தார், குடியேற்றநாட்டுமந்திரிக்கு அனுப்பும்படி மே. த. தேசாதிபதிக்கு ஓர் மனுவைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இலங்கைக்கு இரண்டாவது பிரதிநிதிசபையொன்று அவசியமானதென அம்மனுவில் குறிப்பிட்டிருக்கிறது.

புதிய மந்திரிசபை யேற்பட்ட சிறிது காலத்திற்குள் நடந்த யாழ்ப்பாணம் சங்கத்தின் கூட்டத்தில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தின் பிரகாரம் இந்த மனு தயாரிக்கப்பட்டதாகும்

### மூன்று குறைகள்

தற்பொழுதுள்ள அரசியல் திட்டத்தில் பல குறைகள் இருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அரசியல் திட்டத்தைப் பற்றிப் பத்திரிகைகளில் வெளியான மதிப்புரைகளின்படி குறைகள் மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு: —

முதலாவது குறை, தேர்தற்சட்டங்களைப் பற்றியது. சென்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள எட்டுத் தேர்தல் ஆட்சேபனை மனுக்களிலும் காணப்படும் குற்றச்சாட்டுகளும் தகராறுகளும் தேர்தல் சட்டங்களில் உள்ள குறைகளை நன்கு வெளிப்படுத்துகின்றன.

இரண்டாவது குறைக்குப் பத்திரிகைகளில் "காலித்தனம்" "வாக்குரிமைத் திட்டத்தின் தோல்வி" என்ற தலைப்புகள் வழங்கப்பட்டன. இவை அரசியல் திட்டத்தின் வெற்றி, தோல்வி முதலியவைகளுடன் அதிக சம்பந்தமுள்ளவையாகும்.

மூன்றாவது பகுதிக் குறைகள் மிக முக்கியமானவை ஜனங்களின் ஜாதி மத சமூக உணர்ச்சியையும் வேற்றுமைகளையும் தேர்தல் வேலைக்குப் பயன் படுத்திக் கொள்ளுவதே இக்குறைகளாகும். இதனால் திறமையுள்ள கனவான்கள் அரசாங்க சபையில் இடம் பெற முடியாது போகிறது. ஜனங்களின் ஜாதிபேத உணர்ச்சிகளைத் தேர்தற் பிரசாரத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளும் சீர்கேடான முறை இனி வரும் தேர்தல்களிலாவது நடவாதபடி கட்டுப்பாடுகளை விதிக்க ஒரு விசாரணைக் குழு மிக்க அவசியமானது.

### மந்திரி சபை

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சர்வ சிங்கள மந்திரி சபை தற்செயலாக ஏற்பட்டதாயினும் சரி, முன்னேற்பாட்டின் விளைவாக நிகழ்ந்ததாயினும் சரி, இதன் மூலம் பெரும்பான்மையோரின் ஆதிக்கத்திற்குத் தலைவணங்க நேரிடுமென்று சிறுபான்மையோர் கொண்டுள்ள பயம் வெட்ட வெளிச்சமாக நிரூபிக்கப்பட்டு விட்டது. இதே சட்டதிட்டங்களின் கீழ் இதே நிலைமை எதிர்காலத்தில கட்டாயம் அடிக்கடி நேரிடும். ஆகையால் சட்டதிட்டங்களை மாற்ற வேண்டும்

"இந்த நிலைமையைத் தவிர்க்க நாங்கள் பின்வரும் இரண்டு யோசனைகளைக் கூறுகின்றோம்:-

### ஸ்தானங்கள பங்கு

(1) அரசாங்கசபை ஸ்தானங்களின் எண்ணிக்கைத் தற்சமயமுள்ள போலவே இருக்கலாம். ஆனால் சமபூமிச் சிங்களவர்களுக்குக் கால் பங்கு ஸ்தானங்களும் கண்டியர்களுக்குக் கால்பங்கு ஸ்தானங்களும் இலங்கைத் தமிழர்களுக்குக் கால் பங்கு ஸ்தானங்களும் ஏனையோர்களுக்கு மீதமுள்ள காற்பங்கு ஸ்தானங்களுமாக ஒதுக்கப்படவேண்டும்: இதன் மூலம் பெரும்பான்மையோரின் ஆதிக்கம் ஏற்படாமல் தவிர்க்கப்படும்.

(2) எல்லா வகுப்பாருக்கும் நியாயமான அளவு பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி தேவையானவர்களை இஷ்டப்படி நியமனம் செய்யும் அதிகாரம் மே. த. தேசாதிபதிக்கு அளிக்கப்படவேண்டுமென்பது இரண்டாவது யோசனையாகும்.

அரசாங்கசபையிலே எப்பகுதியாரும் ஆதிக்கம் பெறாதபடி யாவர்க்கும் நியாயமான அளவு பிரதிநிதித்துவம் கிடைக்க மேற்கூறிய யோசனைகளையும் இவைபோன்ற மற்ற யோசனைகளையும் பரிசிலனை செய்ய ஒரு விசாரணைக்குழு நியமிக்கவேண்டியது அவசியம்.

### கமிட்டி முறையில் கேடு

கமிட்டி முறையைப்பற்றிக் குறிப்பிடுகையில் அந்த முறையினால் எத்தனை கேடுகள் வரக்கூடுமென்று எதிர்பார்க்கப்பட்டனவோ அத்தனை தீங்குகளும் நடைமுறையில்வந்திருக்கின்றனவென்றும், அதனால் எவ்வளவு விஷயம் ஏற்படலா மென்று இன்னும் நிச்சயமாகக் கூறமுடியாதென்றும் அம்மனுவிற் சொல்லப்பட்டிருக்கிறது.

### இரண்டாவது சபை

மேலும் இலங்கைக்கு ஒரு 'மேல் சபை" ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்றும் அரசாங்கசபைக்குச் சட்டசபை என்ற பெயர் வழங்கப்படவேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது. இந்த "மேல் சபைக்"குப் பின்வரும் அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டு மென்று மனுதெரிவிக்கிறது.—

(1) கீழ்ச் சபையில் நிறைவேறிய எந்தத் தீர்மானத்தையும் அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ அதிகாரம்

(2) சிறுபான்மை வகுப்பினர் தாழ்ந்த வகுப்பினர்களுடைய நலன்களைப் பாதுகாப்பது.

(3 உத்தியோக நியமனங்களை வர்ஜிதம் செய்தல் நிராகரித்தல் முதலிய அலுவல்களைக் கவனிக்கும் அரசாங்கவேலைக் கமிஷனை வேலை செய்தல்.

---

## அரசாங்கசபைக் கூட்டம்

கொழும்பு 14உ

நேற்றுப் பிற்பகல் அரசாங்கசபை வழக்கம்போல் திரு துரைசுவாமி அவர்கள் தலைமையில் கூடியது. வெள்ளம் மழை முதலியவைகளால் கஷ்டமுற்றிருந்தாலும் அங்கத்தினர் நேற்று உற்சாகமாகவே காணப்பட்டனர். சபை ஆரம்பத்திற்கு முன்னதாகவே விவசாயமந்திரியும் திரு. சில்லேயும சிரித்த முகத்துடன் சபாமண்டபத்துக்கு வந்துசென்றனர். சரியாக 2 30 மணிக்கு 2 அல்லது 3 அங்கத்தினர்களைத்தவிர மற்றையோர்கள் யாவரும் சபைக்கு வந்து சேர்ந்தனர். சமதர்ம வீரர் நேற்று நீலம் கலந்த உடையில் காணப்பட்டார். திரு. அலுவிஹாரா முழுக்கதருடையில் தோன்றினர். மற்றைய அங்கத்தினர் வழக்கம் போல் வீற்றிருந்தனர். கலரியில் ஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தனர். வெள்ள நிவாரணத்தைப் பற்றிச் சமதர்ம வீரர் உருக்கமாகப் பேசினர். ஸ்ரீமதி நேசம் சரவணமுத்து அச்சமயம் த[illegible] நேரில்கண்ட காட்சிகளை அன்பு[illegible]ய குரலில் கூறினர்.

### ராக்ஷச ஆமை

மே 15-ந்திகதி கொழும்புத்துறைமுகத்தில் ஓர் ராக்ஷச ஆமை பிடிக்கப்பட்டது பெட்ரோல் டிப்போவுக்கு அருகில் இருந்த ஒரு படகில் கன கூரக் கயிற்றில் அந்த ஆமை மாட்டிக்கொண்டது. அதனை 50 படகோட்டிகள் சிரமப்பட்டுக் கரை சேர்த்தார்கள். அதன் நீளம் ஆறரை அடி; அகலம் 4 அடி.

# சங்கானை ஒற்றுமைச்சங்கம்

## முதலாவது வருடாந்த அறிக்கை

சில வருடங்களாக "சங்கானை வாலிபர் சங்கம்" என்று அழைக்கப்பட்ட இச்சங்கம், கிராமமுன்னேற்றத்திற்கு வாலிபருடன் அறிவு, அனுபவம் ஆகியன நிறைந்த வயோதிபரின் ஒத்துழைப்பும் இன்றியமையாதெனவும், சங்கானை—மலாய ஒற்றுமைச் சங்கத்துடன் தொடர்புபட்டிருக்கவேண்டுமெனவும் ஓர்ந்து, 1935-ம் ஆண்டு, பங்குனி மாதம், 24-ந் திகதி தொடக்கம் இப்பெயரால் அழைக்கப்பட வேண்டுமென அன்று கூடிய மகாசபையில் தீர்மானித்துக்கொண்டது.

சங்கம், அதன் பெயருக்கேற்பக் கிராமத்தில் இயன்றளவு ஒற்றுமையை ஓம்பி, அதன்பயனாகக் கல்வி பயிர்ச்செய்கையையும், கிராம முன்னேற்றத்திற்கான விஷயங்களிலீடுபட்டுழைத்தலையுமே தனது குறிக்கோளாகக்கொண்டுளது.

இவ்வாண்டில், ஒன்பது நிர்வாகசபைக் கூட்டங்களும், ஓர் ஆலோசனைச்சபைக்கூட்டமும், இரு விசேட மகாசபைக் கூட்டங்களும், மூன்று பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. பொதுக் கூட்டங்களில், முறையே "நாம் முன்னேற்ற மடையும் வழி" "சங்கமும் ஒற்றுமையும்" "சுப்பிரமணிய பாரதி" என்னும் விஷயங்களைப் பீடிகையாகக்கொண்டு சொற்பொழிவுகள் நடாத்திய திரு க. சம்பந்தமூர்த்தி, பிரசித்த நொத்தாரிஸ் திரு. S M கந்தையாபிள்ளை, வழக்கறிஞர் S நாகலிங்கம் அவர்கட்கும், விசேட மகாசபைக் கூட்டங்கட்குச் சமுகந்தந்து, தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்ட சைவவித்தியா விருத்திச் சங்கப் பாடசாலை அதிபர் திரு சு. இராசரத்தினம் அவர்கட்கும், சங்கானை—மலாய ஒற்றுமைச் சங்கப் பிரதிநிதி திரு. வெ. விசுவநாதன் அவர்கட்கும் சங்கம் நன்றி கூறுகின்றது.

இதுகாறுஞ் சங்கத்தைச் சீரிமுறையில் நடாத்துதற்கேற்ற வழிவகைகளைக் கைடாள்வதிலும், கிராம வளர்ச்சிக்குத் தேவையான விஷயங்களைச் சிந்தித்து, அவைகளைச் செய்து முடித்தற்கேற்ற முறைகளை ஆலோசித்தலிலுமேயே சங்கம் கூடிய சிரத்தை எடுக்கவேண்டியதாயிற்று. இக்கிராமத்திற்கு அத்தியாவசியமாக ஓர் தவிபாஷாபாடசாலையும், ஓர் தந்திச்சாலையுமே வேண்டப்படுகின்றன. சங்கானைத் தபாற்கந்தோரில் ஓர் தந்திச்சாலை ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியத்தைப் பற்றித் தபாற்பகுதித் தலைவருக்கு எடுத்துக்காட்டியும், அவர் தற்சமயம் செய்யவொருப்படாததையிட்டு வருந்துகின்றோம். இதைக் குறித்து எங்கள் அரசாங்கசபைப் பிரதிநிதியவர்கள் சிரத்தையெடுப்பார்களென்பதே எங்கள் முழுநம்பிக்கை. ஆகவே இச் சந்தர்ப்பத்தில் இவ்விஷயத்தை மிகப் பணிவுடன் அவர்கட்குச் சமர்ப்பிக்கின்றோம்.

சிவப்பிரகாச வித்தியாசாலையை ஓர் தவிபாஷா பாடசாலையாயமைத்தற்பொருட்டுப் பொதுவாக இச்சங்கமும், சிறப்பாகச் சங்கானை—மலாய ஒற்றுமைச் சங்கமும் ஒத்துழைத்து வருகின்றன. அதன் பொருட்டுப் பணஞ் சேகரிக்கப்பட்டும், இன்னுஞ் சேகரிக்கக் கூடியதாகவிருந்தும், சில வசதியீனங்களின் நிமித்தம் அவ்விஷயம் சித்தியடையாதிலது. ஏறக்குறைய ஈராயிரம் (2000) வெள்ளி சங்கானை—மலாய ஒற்றுமைச் சங்கத்தால் இதற்கெனச் சேகரிக்கப்பட்டும், அத்தொகை பல வருடங்களா[illegible]ங்கியிருக்குங்காரணம் யாதெ[illegible] ஒரு சிலர் விஞ்ஞாபனம். இதுபற்றி 1935-ம் ஆண்டு ஆவணி மாதம், 10-ம் திகதி கூடிய விசேடமகாசபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்த அச்சங்கப் பிரதிநிதி திரு. வெ. விசுவநாதன் அவர்களின் அபிப்பிராயத்தை ஈண்டுத் தருகின்றோம்:— "கல்விபயிருத்திக்கென்றே அப்பணமிருப்பினும், தக்க உத்தரவாதமற்ற நிலையங்களின் மூலம் அப்பணத்தைச் செலவழிக்கப்படாதென்றும், சிவப்பிரகாச வித்தியா-

சாலையின் முகாமையை ஏற்றுநடாத்தும் சைவ வித்தியாவிருத்திச்சங்கம் தாங்கள் அனுப்பிய பணத்தைப் பற்றிய கணக்குகளை அனுப்பாமையால் இப்பாடசாலையின் வளர்ச்சியை அதுஎவ்வளவிற் பொருட்படுத்துகிறதென்பதைப்பற்றியறிய முடியவில்லையென்றும், அது இக்குறைநிவர்த்தி செய்து எவருடன் ஒத்துழைத்தால் சங்கானை-மலாய ஒற்றுமைச் சங்கமும் அப்பணத்தைக் கொண்டு இப் பாடசாலையை ஓர் தவிபாஷா பாடசாலையாக்குதற்கு ஆயத்தமெனவுங் குறிப்பிட்டார். இதனையிட்டு இச் சங்கமும் அவர்களின் அபிப்பிராயத்திற்கிசையவே கருமமாற்றும் நோக்கங் கொண்டுள்ளதென்பதைத் தெரிவிக்கின்றோம்.

இச்சங்கத்தின் தேகப்பயிற்சிப் பகுதியும் இளைஞரால் செவ்வனே நடத்தப்படுகின்றது. கைப்பந்தாட்டமே விசேஷமாக நடைபெறுகின்றது. இப்பகுதியினர் பல கிராமங்களிலுள்ள கைப்பந்தாட்டக் கழகங்களுடன் இணையாட்டஞ் செய்து, எல்லாவிடங்களிலும் வெற்றி எய்தினர். இலங்கையில் முதலாவதெனக் கணிக்கப்படும் கைப்பந்தாட்டக் கழகத்தில் இச்சங்கத் தேகப்பயிற்சிப் பகுதி பிரதிநிதியாகவிளங்கும் திரு. க. செல்வசுந்தரம் அவர்களுமொருவரென்பதை மிகமகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம்.

சங்கானையில் ஓர் வாசிகசாலை திறக்கப்படவேண்டுமெனச் சங்கம் ஆலோசித்தது. அத் தேவையை ஓரளவிற் பூர்த்தியாக்கிய இளைஞர்க்கும், விசேஷமாக அவ் வாசிகசாலைப் பொறுப்பாளர்க்கும் சங்கம் நன்றி செலுத்துகின்றது.

சங்கானை-மலாய ஒற்றுமைச் சங்கத்திற்கும், தற்காலிகமாக வெளியூரிலிருக்கும் இவ்வூர் வாசிகட்கும் சங்கம் தன் மனப்பான்மையைத் தெரிவிக்கின்றது.

"ஒன்றுபட்டா லுண்டுவாழ்வே-நம்மில், ஒற்றுமை நீங்கிலனைவர்க்குந் தாழ்வே" எனும் சுப்பிரமணியபாரதியின் கூற்றுக்கிசைய யாவரும் ஒன்றுபட்டுக் கிராம முன்னேற்றத்திற்கு உழைக்கவேண்டுமென்பதே சங்கத்தின் கோரிக்கையாகும்.

சு. ஆறுமுகம்,
காரியதரிசி,
ச. ஒ. ச.

சங்கானை,
21-5-1936.

---

### முத்தம் ஆகாது

மசாச்சுசெட்ஸ் (அமெரிக்க) என்ற பகுதியில் ஞாயிற்றுக்கிழமை முத்தத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எந்தநாளையிலும் தாராளமாக முத்தம் கொடுக்கலாம்; ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டால் முத்தத்தை நிறுத்தி விடவேண்டும். இது ஓய்வை வற்புறுத்துவதாம்.

### மாமிக்கு மரியாதை

ஆப்ரிக்காவில் கோல்டு கோஸ்ட் என்றவிடத்தில் மாமியாருக்கு சட்டப்படி நிரம்ப மரியாதை கொடுக்கப்படுகிறது. மாமியைப் பற்றி யாரும் இழிவாகப் பேசக்கூடாது பேசினால் தெருவில்விட்டுச்சவுக்கால் அடிக்கப்படும்.

### 14 அடி பாம்பு

திருவாங்கூரைச் சேர்ந்த ஆனைமலையில் பாடிட்போ வென்றில் ஒரு நாகம் தோன்றி அட்டகாசம் செய்ததாம். வெகுபிரயாசைப்பட்டு அந்த டிப்போ உத்தியோகஸ்தர் ஒருவர் தடியால் அடித்துக் கொன்றார். அப்பாம்பின் நீளம் 14 அடி. அதன் தோலை உரித்து உபயோகப்படுத்துதற்காக அதைச்சென்னை குரோம்பேட்டைக்குக்கொண்டுவந்திருக்கிருர்கள்

## பாலர் பகுதி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரிய மருமக்காள், பின்வரும் கொடிகளுக்கு, வழக்கம் போல் புதன் கிழமைக்கிடையில் விடை எழுதி அனுப்புங்கள்.

(1) ஆதிகாலையில் அப்பனை விட்டவள்
அறிவுள்ளோர் கையில் அடுத்தவள்
வேதனையாகவே மேனி கிழிந்தவள்
துத்துகள் வெட்டுகள் கட்டுப்பட்டு [ண்டவள்
ஏது காண் இவள் மஞ்சள் குளிக்கிறுள்
எத்துணையிட்டுத் தன்மேனி மினுக் [கிறுள்
ஒதுகாண் இவள் தாசியுமல்லளே
உரைத்தவர்க் காயிரம் பொன்னும் [தருவனே.

(2) நாவற் பூ சொரிவதேன்? நாயின் வால் ஆடுவதேன்?

(3) ஆடு கறப்பதேன்? ஐவர் பிறப்பதேன்?

சென்ற வியாழக்கிழமை பிரசுரத்தில்வெளிவந்த வினவுக்கு விடையிறுத்தோர்:—

அன்புள்ள சுப்புமா,

நீங்கள் இந்துசாதனப் பத்திரிகையில் எழுதிய கொடிக்கு, சரியான விடை :— கருவாடு.

இதற்குப் பொருள் பின் வருமாறு-

நதி, சமுத்திரங்களிற் கிடந்து. சூரியனுடைய வெயிலிற் காய்ந்து கடலிலே எடுக்கப்பட்ட உப்பை பிடப்பெற்று பொதிமாடுகளில் வண்டிகளில் ஏற்றப்பட்டு நாட்டிலே கொண்டுவரப்படும். திருமாலுடைய வாகனமாகிய கருடன் (பருந்து) எடுத்துக்கொண்டு போகும். அன்னத்தின் மீது சோற்றில் இடப்படும் என்பதாம்.

அதாவது மீனைக் கடலிற் பிடித்து உப்புப்போட்டு வெயிலிற் காயவைத்து வண்டிகளில் ஏற்றிவிலைக்குக் கொண்டுபோவார்கள். கருடனும் கொண்டுபோகும். சோற்றின் மீது வைத்து உண்ணப்படும்.

இங்ஙனம்
உங்கள் அன்புள்ள
மருமகன்
இல 3. க. நாகரத்தினம்

இல. 10. சி. பரமேசுவரன்
உரும்பராய் வடக்கு

இல. 11. சி. சிவகாமசுந்தரி
சைவ வித்தியாசாலை, உரும்பராய்

இல. 237. ஆ முத்துக்குமாரு
ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை
சிவியாதெரு

இல. 322. சி. பத்மநாதன்
ஸ்ரீ பார்வதிவித்தியாசாலை
சிவியாதெரு

இல. 201. பொ. கடுநாயகம்
விக்ரோறியாககல்லூரி
சுளிபுரம்

இல. 99. க. சிவசுப்பிரமணியம்
விக்ரோறியாக்கல்லூரி
சுளிபுரம்

---


## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை


# கட்டுவன் கத்திக்குத்து வழக்கு

## குட்டியர்-கந்தையாவின் சாக்ஷியம்

கட்டுவனில் வசிக்கும் (1) மயிலு (2) கந்தையா (3) நாகலிங்கம் (4) சின்னத்தம்பி ஆகியவர்கள் அவ்வூர் சங்கரப்பிள்ளை ஆனந்தம் என்பவரைக் கத்தியால் வெட்டிக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது; இவ்வானந்தம் சென்ற சனிக்கிழமை காலையிலேயே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காகக் கொண்டுபோகப்பட்டு அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை இரா இறந்துவிட்டார்.

இவ்வழக்கில் குட்டியர்-கந்தையர் கூறியசாட்சியமாவது:—

எனக்கு ஆனந்தத்தைத் தெரியும் அவர் நான் செலுத்தும் காரில்தான் கண்டக்டராக இருந்தார். சென்ற 23-ம் திகதி நானும் அவருமாக எனதுபஸ் 1069ஐ காரச்சிலிருந்து எடுத்துக்கொள்வதற்காக வல்லை சங்கானைறேட்டுக்குப் போனேம் அவர் முன்னும் நான் பின்னுமாகச் சென்றேம். இவ்வெதிரிகள் எங்கட்கு எதிராக வந்தார்கள். இவ்வெதிரிகள் ஆனந்தத்தைக் கலைத்துச்சென்று மயிலு மடியில் பிடிக்க மயிலு கந்தையா ஓடிவந்து இடது விலாப்புறத்தில் ஓர் கத்தியால் குத்திக்காயப்படுத்தினர். நான் அந்த இடத்துக்கு ஓடிப்போனேன். ஆனந்தம் நிலத்தில் விழுந்தார். நான் தூக்கினேன். அப்போது "மயிலுவின் மகன் குத்திப்போட்டான்" என்று சத்தமிட்டார். எதிரிகள் பக்கத்தேயுள்ள பற்றைகளுக்குள்ளாக ஓடிவிட்டார்கள். சத்தத்தைக் கேட்டு அனேகர் வந்தனர். நானே காயக்காரனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன்.

இச் சம்பவம் நடக்கிறதற்கு 2 கிழமைக்குமுன் இவ்விருவரும் சண்டை பிடித்தார்கள் இதில் கந்தையாவுக்குக் காயம் உண்டாயது. அனேகமாக இவர்கள் இந்தவழியாலேதான் இரண்டு நாளைக்கு ஒருமுறை பஸ் எடுக்கச்செல்வதை யாரும் அறிவர்.

இதன் பிற்பாடு (1) செல்லப்பா (2) சின்னத்துரையாகியவர்கள் சாட்சியங் கூறி அதன்பின் வழக்கு 27-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

### வித்தியாசாலையிற பெற்றூர் தினம்.

கீழ்க்காணுங்கொண்டாட்டம்வைத்தியாசாலை மண்டபத்தில் (20–5–36) புதன்கிழமை மாலை6-30 மணியளவில் ஸ்ரீமாந் K. S. அருள்நந்தி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

மண்டபம் நன்கலங்கரிக்கப்பட்டிருந்தது. ஜனங்கள் ஏராளமாக வந்திருந்தனர்

தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. பாலர்கள்பாபேருக்கும் வந்தனம் கூறி முடித்தபின் தலைவர்வர்கள் பெற்றுரின கடமை இன்னதுதான் என்பதைத் தெளிவாக விளக்கிச் சிறிது நேரத்தின் பின் அவசர கருமார்த்தமாகச் சென்றுவிட்டார்கள்.

பாலர்கள் நடித்துக் காட்டிய முருகவழிபாடு சபையோரைப் பரவசப் படுத்தியது. குழு பாட்டு, சுகாதார சம்பந்தக்கதை, கதர்விற்பனை, சிறுமிகள் இருவரின் கீர்த்தனம், ப்ருந்தாவனக் காட்சி நடித்தல் பவளக்கொடியில் ஓர் பகுதி) ஆகியனவும் குறிப்பிடற்பாலன.

முடிவுரையில் ஸ்ரீமாந் V. K.நாதன் அவர்கள் வைத்தியசாலை மனேச்சரையும் ஆசிரியர்களையும் நடித்த பிள்ளைகளையும் மிகவும் பாராட்டிப் பேசினர். வந்துசென்ற தலைவருக்கும், பின் தலைமை வகித்தவருக்கும் சபையோருக்கும் வைத்தியாசாலை மனேச்சர்கட்கும் ஏனைய அன்பர்களுக்கும் தலைமையாசிரியரால் நன்றி கூறப்பட்டது.

மாணவர்களுக்குச் சங்கீதப்பயிற்சி அளித்த ஸ்ரீமாந்கள். K. வேலாயுதபிள்ளை, P. செல்வராஜா ஆகியஇருவருக்கும் ஒவ்வோர் தங்கப்பதக்கம் சன்மானிக்கப் பட்டது. 8-45மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறியது.

கடிதம்.

---


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண் கிழக்கு கரு. சி. சொக்கலிங்கம்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின்விபரம்.

| இல | ரு. | ரு | அடைவுவைத்தவர் ஊரும் பெயரும் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| | | | 1934 ம் ஆண்டு அக்டோபர் மாதம் |
| 10054 | 3 | 8 | சங்கானை மு. செல்லத்துரை இபி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 10138 | 11 | 6 | கோண்டாவில் வி. மார்க்கண்டு இபி கல மோதிரம் 1 |
| 10365 | 31 | 45 | சரவணை இ மருதையனர் அச்சக்காப்பு சோடி 1 |
| | | | நவம்பர் மாதம் |
| 10526 | 11 | 10 | மல்லாகம் வீ கன்னிதம்பி பதிபுரோச்சு 1 |
| 10632 | 19 | 10 | வேலணை க சுந்தர் திருமங்கிலியம் 1 |
| 10653 | 20 | 73 | கொக்குவில் வி சுந்தையா இபிகல பதக்கத்துடன் முறிச்சங்குத்தி அட்டியல் 1 |
| 10708 | 26 | 15 | வண்மேற்கு நா செல்லத்துரை இபி கல் தோடு சோடி 1 குருசு 1 |
| | | | டிசம்பர் மாதம் |
| 10800 | 6 | 6 | இணுவில் வ காரணபிள்ளை இபிகல் மோதிரம் 1 |
| 10866 | 11 | 7 | உடுவில் கா பொ செல்லத்துரை இபிகல் பதக்கம் 1 |
| 10882 | 12 | 48 | வண்மேற்கு செ வீரவாகு சங்கிலி 1 |
| 10928 | 17 | 4 | நல்லூர் க சின்னத்தம்பி தாயத்து 1 |
| 10981 | 22 | 9 | வண்கிழக்கு க மருதப்பா இபி கல் மோதிரம் 1 |
| | | | 1935-ம் மாதம் ஜெனவரி |
| 11235 | 12 | 125 | கொக்குவில் வி கந்தையா இபி கல பெண்டனுடன் குண்டுச் சங்கிலி 1 |
| 11240 | 13 | 50 | வண்மேற்கு நா செல்லத்துரை செயின் அட்டியல் 1 |
| 11241 | 13 | 50 | அதியடி வை சோமசுந்தரம் அரைஞாண்கூடு2, காட்டுக்கடுக்கன் சோடி1 |
| 11368 | 26 | 20 | அளவெட்டி மா சோமசுந்தரம் செடிவேலைசெய்த முழுப்பவுண் 1 |
| 11376 | 27 | 5 | அராலி க முருகேசு காப்பின் முகப்பு சோடி 1 |
| 11393 | 28 | 7 | நல்லூர் க வேலுப்பிள்ளை இபிறகல் வைரமோதிரம் 1 |
| 11403 | 29 | 35 | மண்டைதீவு வ. வேலுப்பிள்ளை பழுது சட்டுக்கொடி 1 |
| | | | பிப்ரவரி மீ |
| 11443 | 1 | 6 | செட்டிதெரு பொ தம்பித்துரை பின்கோர்க்கு 1 |
| 11474 | 5 | 50 | மாவிட்டபுரம் கோ க கந்தையா சங்கிலி 1 |
| 11475 | 5 | 7 | கந்தர்மடம் ச வேலுப்பிள்ளை இபிறகல் காதப்பு சோடி 1 |
| 11525 | 10 | 10 | மாவிட்டபுரம் கோ கந்தையா இபிறகல் பதக்கம் 1 |
| 11535 | 11 | 15 | புத்தூர் ச பரமகுரு இபிறகல் தோடு சோடி 1 |
| 11668 | 22 | 170 | மாவிட்டபுரம் கோ கந்தையா செடிக்காப்பு சோடி 1 |
| 11703 | 25 | 8 | சங்கானை பொ சபாரத்தினம் இபிறகல் தோடு சோடி 1 |
| | | | மார்ச்சு மீ |
| 11860 | 13 | 5 | வண்மேற்கு கு வி அப்பையா இபிறகல்மோதிரம் 1 |
| 11892 | 16 | 18 | வண்மேற்கு கா சரவணமுத்து ஆடுசன் மோதிரம் 1 |
| 11899 | 17 | 13 | வண்கிழக்கு க அம்பிகாபதி வைரவர் மோதிரம் 1 |
| 11963 | 25 | 13 | வண்கிழக்கு கு க ராஜ பச்சைக்கல் மோதிரம் 1 செட்பின் 1 |
| 12011 | 30 | 120 | மீசாலை க ஆறுமுகம் அச்சக்காப்புசோடி1, முறிச்சங்குத்தி அட்டியல்1 |

விற்பனவு: தாது வருஷம் ஆனிமீ 1ந் திகதிக்குச் சரியான (14-6-36) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்டவை பிறக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
லெக்சின் மேற்பார்

Mis. 41. 28-5 & 1-6-36

# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

**இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.**

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா **2-50.**
தபாற்கூலி **45** சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை பொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் செட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

பனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

### இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வெகுதிரிகிற ஒவ்வொரு சிறபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைமுழக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்ணண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணந்துறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணந்துறை.
(H 332. 20-3-36 to 19-9-36)



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக ரோகிகளுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில்லை கைகண்டதாகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் ரோகிகள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாஞ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் திரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.
Y55 1-1-34 to 31-12-36) சிலோன்.



"இரதி மன்மத"

## சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—
மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S. India.**
H 208. 1-12-35 to 31-5 36



சகாய விலை

## சிறந்த தேக்கமரங்கள்!

இந்த மேமாசம் 4-ம் தேதிதொடக்கம்
31-ம் தேதி முடிய குறைந்தவிலை.

பெருந்தொகையான தேக்கமரங்களை நாங்கள் விரைவில் இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், இப்பொழுது இங்குள்ள சிறந்த ரங்கூன்சியம் தேக்கமரங்களையெல்லாம், மேலே காட்டப்பட்ட தேதிகளுக்கிடையில் குறைந்தவிலைக்கு விற்பதற்காகிய ஒழுங்குகள் செய்துவிட்டோம்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

**S. வீரகத்திப்பிள்ளை & ஸன்ஸ்**
தேக்கமர ஓட்டு வியாபாரிகள்.
(Mis. 25 7-5to 31-5-36.)



## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின்
முதன்மையானதும் சிறந்ததுமான
திவ்விய ஔஷதம்.
மிருகக் கொழுப்பு
கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.
Y 53 1-1—31-12-36)



# யாழ்ப்பாணக் குடாநாட்டு வாசிகளுக்கு ஓர் சிறந்த சந்தர்ப்பம்

# அசானோ சிமேந்தை




வாங்குவோர்க்கு

ஒரு ஹெர்க்குயூல்ஸ்



# பைசிக்கிள் இனாம்.

அசானோ சிமேந்தே இங்கு விலைப்படும் சிமேந்துகளுக்குச் சிறந்தது. குணம், பலம், பாரம் ஆகியவற்றிற்கு உத்தரவாதம் பெற்றது.

இலங்கையிலுள்ள யூ. டீ. சீ.கள் முனிசிபாலிட்டிகள், இன்னும் ஏனைய பொது ஸ்தாபனங்கள் ஆதியனவற்றிற்கு உபயோகிக்கப்படுவது

விபரம்: துண்டுப்பத்திர விளம்பரத்திற் காண்க.

சோல் ஏஜெண்ட்ஸ்:—

## ஹெயிலி & கென்னி

(M. 36.) தபால் பெட்டி 70, கொழும்பு.



## சிவன் வேப்புத் தைலம்.

செம்மேகம், சருமேகப் பத்தக்கள், குஷ்டம், குஜறநோய், அரிப்பு, சடிப்பு, சிரந்தி, கரப்பான் புண்களும்; விஷ கடிகள் மேகஊறல், கக்கூள்பத்தக்கள், சொறி சிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய ரூலை ரோகங்கள்; அண்டவாதம் கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், விக்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பதறு, ரணாசகளுக்கு இதை மேற்கூறும் பூசலாம்.

12நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.
நிராசெனக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக்கணக்கில் குணமாகிவிட்டன.

### தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், கபக்கட்டு, கோழை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய கோளாறுகளையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், நொய் விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீருலல், இனிப்புத் தோன்றல், பசி மந்தம், ஆகிய பீனிச கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணம்செய்கிறது.

### இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பத்துவருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், அர்சாதறம், ரொம்பவரும் இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.
(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அனுபானம், தாளிசபத்திரி சூரணம் உள்பட
20 நாள் மருந்து ரூபா 12-50.
குறிப்பு:— வெளிநாட்டார் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.
(Q 19. 27-4 to 26-7-36) வி (PALNI S. I.)


வான்முகில் வழாதபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 28th May 1936.